**தலைப்பு – 114- போக்குவரத்து அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2013 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**போக்குவரத்து அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
| --- | --- |
| 306 | இலங்கை புகையிரதத் திணைக்களம் |
| 307 | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**(அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 48,071,460,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 44,621,872,247 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 304,653,769 இற்கும் ரூபா 1,582,323,240 இற்கும் இடைப்பட்ட அளவில் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 5 சதவீத்திற்கும் 12 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 114 | 13,030,400,000 | 11,448,076,760 | 1,582,323,240 | 12.14 |
| 306 | 32,541,960,000 | 30,979,349,256 | 1,648,514,240 | 05.07 |
| 307 | 2,499,100,000 | 2,194,446,231 | 304,653,769 | 12.19 |
| மொத்தம் | 48,071,460,000 | 44,621,872,247 | 3,535,491,249 | 07.35 |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களினால் 2013 ஆம் ஆண்டில் 04 வருமான தலைப்புக்களிற்காக ரூபா 13,039 மில்லியன் வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 13,150 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மிகை/(பற்றாக்குறை) மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை/(பற்றாக்குறை) | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 20.01.01.00 | 4,760,000,000 | 5,423,293,490 | 663,293,490 | 14 |
| 20.03.02.14 | 6,575,000,000 | 6,525,205,404 | (49,794,596) | (01) |
| 10.03.07.04 | 62,000,000 | 55,614,559 | (6,385,441) | (10) |
| 10.03.01.00 | 1,642,000,000 | 1,145,754,012 | (496,245,988) | (30) |
| மொத்தம | 13,039,000,000 | 13,149,867,465 | 110,867,465 | 01 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 114 | 11401 | 8,000,000 | 1,485,290 | 2,600,000 | 4,568,643 | 33,500,000 | 20,480,288 |
| 306 | 30601 | 570,000,000 | 280,353,855 | 375,000,000 | 355,963,271 | 1,852,000,000 | 678,115,631 |
| 307 | 30701 | 22,000,000 | 22,000,000 | 15,000,000 | 18,172,201 | 110,000,000 | 87,713,372 |

### 2.3.2 களஞ்சிய முற்பணக் கணக்குகள்

அமைச்சின் கீழ் புகையிரதத் திணைக்களத்தால் களஞ்சிய முற்பணக் கணக்கு பேணப்பட்டிருந்தது.

#### (அ) பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

புகையிரதத் திணைக்களங்களிற்குரிய களஞ்சிய முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 30602 | 1,700,000,000 | 1,673,843,600 | 850,000,000 | 2,503,979,400 | 5,640,000,000 | 5,405,729,386 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கும் பொதுவைப்புக் கணக்கும்

### 2.4.1 கட்டுநிதிக் கணக்கு

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 7002/0000/00/0075/0012/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 78,490 ஆகும்.

### 2.4.2 பொது வைப்புக் கணக்கு

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 6000/0000/00/0015/0161/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் மீதி ரூபா 280,346,078 ஆகும்.

# 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

## 1. தலைப்பு 114 – போக்குவரத்து அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

போக்குவரத்து அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 23 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் போக்குவரத்து அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) மற்றும் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 06 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 27,250,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 34 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 08 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

11401 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 180,179 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சிற்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வினை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தி அவ்வறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் போக்குவரத்து அமைச்சினால் 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2012 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2012 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் போக்குவரத்து அமைச்சரின் அலுவலகத்திற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

---

இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான 04 வாகனங்கள் முறையான அங்கீகாரமின்றி போக்குவரத்து அமைச்சினால் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தன.

**(இ) பாவனைக்கு எடுக்கமுடியாத பொருட்கள் அகற்றப்படாமை**

---

2012 ஆம் ஆண்டின் போது பாவனைக்கு பொருத்தமற்றதாக இனங்காணப்பட்ட 225 பொருள் அலகுகள் கணக்காய்வுத் திகதியான 2014 மே 20 ஆந் திகதி வரையிலும் நிதிப்பிரமாணம் 772 இன் பிரகாரம் அகற்றுவதற்கு அமைச்சு தவறியிருந்தது. மீளாய்வாண்டின் போது அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்களின் பதவியணியினருக்கு அவ்வாறு பயன்படுத்த முடியாத பொருட்கள் தொடர்பாக கூறுவிலை கோரப்பட்டு சில பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தமையும் அவ்வாறு அகற்றப்படாத பொருட்களை விற்பனைசெய்வதற்கு 2014 பெப்ரவரி மாதத்தில் செய்திப்பத்திரிகை மூலம் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட போதும் அப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு முன்வராமையால் தொடர்ந்தும் அப்பொருட்கள் அமைச்சின் வளவில் வைக்கப்பட்டிருந்ததாக அமைச்சால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**1.5 இணக்கமின்மைகள்**

---

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்ப்பு** | **பெறுமதி** | **இணக்கமின்மை** |
|---|---|---|
| | **ரூபா** | |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| நிதிப்பிரமாணம் 66(1) | - | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு போதியளவாக இல்லாத விடத்து வீரமன் நடைமுறையில் அல்லது குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கத்தின் மூலம் அல்லது குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாட்டை பெற்றதன் பின்னர் கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாது 12 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 4,744,911 இனால் விஞ்சி கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் வீரமன் நடைமுறை பின்பற்றப்பட்டு ஏற்பாடு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. |
| (ii) பொது நிருவகச் சுற்றுநிருபம் | | |
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்று நிரூபம் | 3,335,364 | மீளாய்வாண்டின் போது 6 வாகனங்களுக்கு ரூபா 929,529 தொகையான 5,776 லீற்றர் எரிபொருளும், 13 வாகனங்களுக்கு ரூபா 2,405,835 தொகையான 19,588 லீற்றர் எரிபொருளும் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான சுற்றுநிருபத்தின் படி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

## 1.6 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் நலிவுகள்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் கைவிடல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்டங்களின் தாமதம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | | | ரூபா. மில்லியன் | |
| மாத்தறை – கதிர்காமம் செயற்திட்டம் (பெலிஅத்த முதல் கதிர்காமம் வரை) | 92,252.29 | 2006 | 2017 | இல்லை | 2013 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின்படி பெலிஅத்த முதல் கதிர்காமம் வரை உத்தேசிக்கப்பட்ட புகையிரதப் பாதையை அமைக்கும் கட்டம் II மற்றும் III இல் சுற்றாடல் தாமதங்களை மதிப்பிடும் சாத்திய வள ஆய்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டியிருந்தது. அவ் ஆய்வு கையளிக்கப்பட்ட நிறுவகத்தினால் 2014 பெப்ரவரி 11 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஹொரனை – கொட்டாவை புகையிரதப் பாதை | 11.00 | 2006 | 2008 ஒக்.30 | 6.00 | 2014 யூலை 14 ஆந் திகதி வரையிலும் சுற்றாடல் சாத்திய வள ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| குருநாகல், தம்புள்ளை ஊடாக ஹபரர்ண புகையிரதப் பாதை | 4,000.00 | 2008 ஏப்ரல் 08 | 2009 சனவரி 31 | 23.5 | சுற்றாடல் சாத்தியவள நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தக் கம்பனிக்கு கையளிக்கப்பட்ட போதிலும் ஒரு கம்பனி அதிலிருந்து விலகியிருந்தது. 2014 யூலை 14 ஆந் திகதி வரையிலும் அதனை வேறு கம்பனிக்கு கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| கொழும்பு, அம்பாந்தோட்டை, களணிவெலி புகையிரதப் பாதை | 5,750.00 | 2008 ஏப்ரல் 08 | 2016 | 5.40 | 2014 யூலை 14 ஆந் திகதி வரையிலும் சாத்தியவள ஆய்வு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| மதவாச்சி திருகோணமலை புகையிரதப் பாதை | 9.00 | 2010 சனவரி 01 | 2012 நவ. 28 | 11.00 | சாத்தியவள ஆய்வு அறிக்கை கிடைத்திருந்த போதிலும் அதன் எஞ்சிய நடவடிக்கைகளுக்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| வெல்லவாய, பிபில, பதுளை புகையிரதப் பாதை | 9.00 | 2011 பெப்ரவரி 01 | 2012.12.30 | 1.2 | மதியுரை நிறுவனத்தினால் 2014 மார்ச் 21 ஆந் திகதி செயற்திட்டம் தொடர்பான ஆரம்பப் பரிசோதனை |

அறிக்கை அமைச்சிற்கு வழங்கப்பட்ட போதிலும் அதற்கான இறுதி அறிக்கை 2014 நவம்பர் 11 ஆந் திகதி வரையிலும் அந்த நிறுவனத்தால் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.7 செயலாற்றல்**

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

மீளாய்வாண்டின் போது போக்குவரத்து அமைச்சின் பிரதான செயற்பாடுகளாக இனங்காணப்பட்ட பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) தேசிய ஒன்றிணைந்த பிரயாணிகள் மற்றும் பொருட்களை புகையிரதத்தில் கொண்டு செல்லும் முறைமை தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரயாணிகள் நிலைய சேவையினை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.8 வாகனக் கட்டுப்பாட்டின் நலிவுகள்**

அமைச்சின் வாகனக் கட்டுப்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருட்களை களஞ்சியத்திற்கு கையளித்தலிலுள்ள நலிவுகள்

வாகன பழுதுபார்த்தலின் பின்னர் கழற்றி அகற்றப்படுகின்ற உதிரிப்பாகங்கள் மற்றும் உபயோகிக்கப்பட்ட டயர்களை மீள களஞ்சியத்திற்கு கையளிக்கும் முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்ட உதிரிப்பாகங்களை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு 2014 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பழுதுபார்த்தலின் நலிவுகள்

அமைச்சிற்கு சொந்தமான ஒரு வாகனம் 2013 மே 13 ஆந் திகதி முதல் 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையான காலத்தில் 05 மாதங்களும் 10 நாட்களும் 09 சந்தர்ப்பங்களில் 03 கராஜ்களுக்கு அனுப்பப்பட்டு ரூபா 913,761 தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. அக்கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடும் பழுதுபார்த்தல் முடிவடைந்த பின்னரான மதிப்பீடும் பழுதுபார்த்தல் சரியாக மேற்கொள்ளப்பட்டமையும் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்கள் கைதவிர்க்கப்படாமை

ஓடக்கூடிய நிலையில் காணப்படாமையின் காரணமாக 04 வாகனங்கள் 02 வருட காலம் முதல் அமைச்சின் வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு வாகனங்களை இயற்கை அழிவுகளுக்கு உட்பட இடமளிக்கப்பட்டிராததுடன் அந்த வாகனங்களை பழுதுபார்த்து ஓடும் நிலைக்குக் கொண்டுவருவதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ 2014 யூலை 14 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாத்தறையிலிருந்து பெலிஅத்த வரையான புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்காக காணிகளைச் சுவீகரிக்கும் போது உரிய இழப்பீட்டுப் பணம் தாமதமாகச் செலுத்தப்பட்டமையினால் தாமத காலத்திற்கான வட்டியாக ரூபா 2,748,734 உரிய காணி உரிமையாளர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.10 முகாமைத்துவ நலிவுகள்

எரிபொருள் செலவினங்களையும் பழுதுபார்த்தல் செலவினங்களையும் புகையிரதத் திணைக்களத்திற்கு மீளளிக்காமை

இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் 2013 ஆம் ஆண்டின் போது கௌரவ அமைச்சரின் பதவியணியினருக்கும் அமைச்சின் செயலாளர் பதவியணியினருக்கும் ரூபா 569,272 பெறுமதியான 4,021 எரிபொருள் லீற்றர் (2,008 லீற்றர் பெற்றோல் மற்றும் 2,013 லீற்றர் டீசல்) வழங்கப்பட்டிருந்தன. அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக புகையிரதத் திணைக்களம் செலவிட்ட ரூபா 134,619 தொகையும் அமைச்சினால் புகையிரதத் திணைக்களத்திற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.11 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 25 | 19 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 137 | 90 | 47 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 45 | 38 | 09 | 02 |
| (v) | ஏனையோர்(அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 03 | 03 | - | - |
| | மொத்தம் | 215 | 154 | 63 | 02 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 63 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(iii) போக்குவரத்து அமைச்சில் ஆரம்ப நிலையில் 09 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், புகையிரதத் திணைக்களத்தில் நாட் கூலி நியமனம் வழங்கப்பட்ட 50 ஊழியர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையானவர்கள் போக்குவரத்து அமைச்சிற்கு நியமிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தி புகையிரதத் திணைக்களத்திலிருந்து சம்பளம், மேலதிக நேரம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. அச் செலவினங்கள் அமைச்சினால் புகையிரதத் திணைக்களத்திற்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2. தலைப்பு 306 – இலங்கை புகையிரதத் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 03 ஆம் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும், வருமானக் கணக்கும், களஞ்சிய முற்பணக் கணக்கும் மற்றும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) தொடக்கம் (கெ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 தொடக்கம் 2.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

இலங்கை புகையிரதத் திணைக்களத்தினால் 2014 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அக்கணக்குகள் தாமதமாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| தலைப்பு/வருமானக் குறியீடு/விடய இல. | கணக்கின் பெயர் | கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்ட திகதி | தாமதம் |
|---|---|---|---|
| | | | மாதம் |
| 306 | ஒதுக்கீட்டுக் கணக்கு | 2014 யூன் 06 | 02 |
| 20:01:10:00 | வருமானக் கணக்கு | 2014 யூலை 04 | 03 |
| 30601 | அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று | 2014 யூன் 03 | 02 |
| 30602 | களஞ்சிய முற்பணக் கணக்கு | 2014 யூலை 14 | 03 |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---------------------------------------------------------------------

உடன்படிக்கைகள், மீதி உறுதிப்படுத்தல் போன்ற தேவையான சான்றுகள் திணைக்களத்தில் காணப்படாமையால் ரூபா 1,878,520,126 தொகைக்குரிய 06 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்பிகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(இ) கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்**

-----------------------------------------------------------------------------------

இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 68 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 21 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 7,582,810,824 ஆக இருந்தன.

**(ஈ) எல்லை பின்பற்றப்படாமை**

-----------------------------------------------

இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் 30601 ஆம் விடய இலக்க அரசாங்க ஊழியர் முற்பணக் கணக்கு செயற்பாடுகளுக்குரிய ரூபா 375,000,000 தொகை ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை பாராளுமன்றத்தால் விதிப்பட்டிருந்த போதும் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 355,963,271 தொகை பெறுவனவாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 19,036,729 இனால் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை அடையப்பட்டிருக்கவில்லை.

**(உ) பாதீட்டு முரண்**

-----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 10 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 22,000,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 23 செலவின விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது

அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 25 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(iii) 15 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 2 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரிய ரூபா 571,221,487 கூட்டுத்தொகையான சேமிப்புக்களுக்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய போதியளவான காரணங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட மீதி 2004 முதல் 2013 ஆம் ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த களஞ்சிய மெய்மையாய்வுகளில் பௌதீக ரீதியாக இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளதாக பிரதான நிதி உத்தியோகத்தர் சான்றுப்படுத்தியிருந்த போதிலும் 12 உப திணைக்களங்களின் 2013 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வுச் சபை கணக்குகளைச் சமர்ப்பித்ததன் பின்னர் 2014 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் போது நியமிக்கப்பட்டிருந்தன.

**(ஊ) கட்டுநிதிக் கணக்கு**

நிதிப்பிரமாணம் 371 இன் படி செயற்பாடு நிறைவு பெற்றவுடன் பெற்ற செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதும் 1998 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை தீர்க்கப்படாத உப கட்டு நிதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,034,324 ஆகும்.

**(எ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 42,609,283 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 570 இன் படி முன்னைய சகல வைப்புக்கள் தொடர்பாக ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## (ஏ) வருமானக் கணக்கு

----------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 2,628 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன் அந் நிலுவை வருமானம் 1962 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாகும். மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமானக் குறியீடு 01 இற்குரிய அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது 2013 ஆம் ஆண்டில் மொத்த வருமானம் 11 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது கிடைத்த வருமானத்தில் நிலுவை வருமானங்களின் கிடைப்பனவு ரூபா 209,394,861 ஆக இருந்ததுடன் அது மொத்த வருமானத்தில் 3.8 சதவீதமாக இருந்தது.

(iii) புகையிரத ஆணைச்சீட்டு மூலம் ஆசனங்களை ஒதுக்கும் போது பிரயாணிகள் விண்ணப்பிக்கின்ற வகுப்பிற்காக உரித்தான புகையிரதப் பெட்டிகளில் ஆசனங்கள் காணப்படாத சந்தர்ப்பத்தில் அதற்கு கீழுள்ள வகுப்பின் பெட்டியில் ஆசனமொன்றை ஒதுக்கீடு செய்து ஆணைச்சீட்டில் குறிப்பிடப்பட்ட வகுப்பின் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. (உதாரணமாக மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் முதலாவது வகுப்பின் புகையிரத ஆணைச்சீட்டிற்கு இரண்டாவது வகுப்பின் ஆசனம் வழங்கப்பட்டு முதலாவது வகுப்பின் கட்டணம் அறவிடல் ) புகையிரத ஆணைச்சீட்டில் குறிப்பிடப்பட்ட வகுப்பிற்குரிய மொத்தப் பணமும் பெறப்படுகின்றமையால் புகையிரதத் திணைக்களத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விஞ்சி மிகை வருமானம் கிடைக்கின்றமை அவதானிக்கப்பட்டது. கணக்காய்வின் போது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2013 நவம்பர் 20 தொடக்கம் 2013 நவம்பர் 24 ஆந் திகதி வரையான 05 நாட்களுக்கு மாத்திரம் ரூபா 444,970 தொகை இவ்வாறு மிகை வருமானமாக சேகரிக்கப்பட்டிருந்தது.

(iv) 2010 மார்ச் மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான 02 மாதங்கள் முதல் 45 மாதங்கள் வரையிலான காலப்பகுதியில் வருமான சீராக்கம் பூர்த்தியாக்கப்படாத பொதிப் போக்குவரத்து வருமானம் தொடர்பாக 216 புகையிரத நிலையங்களிலும், புகையிரத பருவச் சீட்டு வருமானம் தொடர்பாக 263 புகையிரத நிலையங்களிலும், பிரயாணிகள் போக்குவரத்து வருமானம் தொடர்பாக 301 புகையிரத நிலையங்களிலும் வருமான சீராக்கம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் உள்ளபடியான வருமானத்தின் சரியான தன்மை பல வருட காலமாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(v) புகையிரத பொருள் போக்குவரத்திற்காக 14 நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டிற்காக ரூபா 374,729,794 தொகையும், 1980 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 32 நிறுவனங்களிலிருந்து பொருள் போக்குவரத்து வருமானமாக ரூபா 553,619,180 தொகையுமாக ரூபா 928,348,974 கூட்டுத்தொகையான நிலுவை வருமானத்தை ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) 2013 ஆம் ஆண்டிற்காக மாதாந்த புகையிரத நிலைய பொதுக் கணக்கைத் தயாரிக்கும் போது 23 புகையிரத நிலையங்களில் 49 மாதங்களுக்குரிய வருமான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) திணைக்களத்திற்குரிய வைஸ்ரோய் புகையிரதம் தனியார் கம்பனிக்கு வருடாந்தம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் புகையிரத இயந்திரம் மற்றும் புகையிரதப் பெட்டிகளை பராமரிக்கும் செயற்பாடுகளுக்காக 2006 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 6,092,801 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) LB 36111 குத்தகையின் கீழ் நீர்கொழும்பு புகையிரத வளவிலுள்ள 08 பேர்ச் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக வாடகைக்கு வழங்கியதற்காக மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 89,400 ஆக இருந்ததுடன் அத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) வெயாங்கொடை புகையிரத நிலைய வளவில் பேணப்பட்டு வருகின்ற வியாபார நிலையங்கள் மற்றும் வாகனத் தரிப்பிடங்களுக்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவை வாடகை வருமானம் ரூபா 224,626 ஆக இருந்ததுடன் அத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(x) கந்தளாய் புகையிரத நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள காணியை வாடகைக்கு வழங்கியதற்காக குத்தகையாளரால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 51,331 வாடகைத் தவணைப்பணம் நிலுவையாகக் காணப்பட்டது. அந் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(xi) அரசாங்கத்திற்குரிய கூட்டுத்தாபனங்கள், சபைகள், அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு மட்டக்களப்பு மற்றும் வாழைச்சேனை புகையிரத நிலையத்திற்கருகில் புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான 13 காணிகள் குத்தகைக்கு வழங்கியமையால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 4,862,286 தொகையான வாடகை வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. அவ்வாறே தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட அவ்வாறான 53 காணிகளுக்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவை வாடகை வருமானம் ரூபா 10,795,203 ஆக இருந்ததுடன் அந்த வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xii) றாகம புகையிரத நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள 02 காணிக் கூறுகள் தனியார் தரப்பினருக்கு 2012 ஆகஸ்ட் 12 ஆந் திகதி முதல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. ஒரு காணி வாகனத் தரிப்பிடமாக பேணுவதற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2013 ஏப்ரல் மாதம் வரையிலும் அந்தக் கம்பனியிலிருந்து அறவிட வேண்டிய வாடகை ரூபா 28,800 தொகையையும், அந்த புகையிரத நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள மற்றைய காணி 2013 யூலை 01 ஆந் திகதி முதல் ரூபா 44,100 இற்கு மாதாந்தம் வாடகைக்கு வழங்கியமையினால் 6 மாதங்களுக்காக அறவிட வேண்டிய வாடகையான ரூபா 264,600 தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xiii) திணைக்களத்திற்குரிய சிற்றுண்டிச்சாலை, கடைகள், புத்தகசாலை, சில்லறை விற்பனைக் கடை, பால் கடை மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பவற்றை மீளாய்வாண்டிற்கு முன்னைய வருடங்களின் போது வாடகைக்கு வழங்கியமையால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த நிலுவை வாடகை வருமானம் ரூபா 12,848,623 ஆக இருந்ததுடன் அந்த வருமானத்தை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xiv) பல்வேறு தொலைபேசிக் கம்பனியால் திணைக்களத்தின் வளவில் பொருத்தப்பட்ட 117 தொலைபேசிக் கொட்டகைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதிவரையில் அறவிடவேண்டிய மொத்த நிலுவைப்பணம் ரூபா 5,958,975 அக இருந்தது. அந்த நிலுவைப் பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xv) மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் போது இரண்டு அரசாங்க வங்கிகள் மற்றும் ஒரு தனியார் வங்கி என்பவற்றால் புகையிரத நிலையங்களில் பொருத்தப்பட்ட 10 டெலர் இயந்திரங்களுக்கான வாடகை, மின் கட்டணத்திற்கான வைப்பாக திணைக்களத்திற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டிய மொத்தப் பணம் ரூபா 19,578,000 ஆகும்.

(xvi) கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் 02 சிற்றுண்டிச்சாலைகள் திணைக்களத்தால் 2009 பெப்ரவரி மாதம் முதல் கேட்டர்ஸ் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கம்பனியால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிலுவை மின்சாரக் கட்டணமாக ரூபா 1,221,100 தொகையும், வாடகை செலுத்துவதில் தாமதமான நாட்களுக்காக அறவிடுவதற்கு இருந்த தாமதக் கட்டணம் ரூபா 441,900 தொகையும் ஆக ரூபா 1,663,000 நிலுவையாகக் காணப்பட்டது. அந்த வருமானத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(xvii) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்களை தனியார் மற்றும் அரசாங்க நிறுவனங்களிற்கு வாடகைக்கு வழங்கியதற்காக அறவிட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 10,420,954 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி

வரையில் முன்னைய ஆண்டிற்கான நிலுவை வாடகை வருமானம் ரூபா 82,281,169 ஆக இருந்தது. அப் பணத்தை அறவிடுவது தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்று திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(xviii) திணைக்களத்தால் 2006 சனவரி 01 ஆந் திகதியை அடிப்படையாகக் கொண்டு வாடகை திருத்தப்பட்டு கையேற்கப்பட்ட மற்றும் கையேற்பதற்குரிய முன் அறிவித்தல் வழங்கப்பட்ட 16 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 4,880,013 தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(xix) மட்டக்களப்பு முதல் கல்ஓயா வரை ஓட்டத்தில் ஈடுபடுகின்ற புகையிரத பஸ்ஸின் வருமானத்தை சேகரிக்கும் பொறுப்பு புகையிரத காப்பாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவர்களால் 2013 சனவரி முதல் செப்தெம்பர் வரை 55 நாட்களுக்காக நாளாந்தம் சேகரிக்கப்பட்ட வருமானம் புகையிரத நிலைய அதிபர்களுக்கு கையளிக்கப்படாமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

30601 ஆம் இலக்க அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இணக்கக் கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 73,631,897 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களப் புத்தகத்தின் படி முற்பணக் கணக்கின் மீதி ரூபா 753,725,047 ஆக இருந்ததுடன் திறைசேரி கணணி அச்சிடல் குறிப்புக்களின் பிரகாரம் அது ரூபா 757,902,852 ஆக இருந்தது. அதன் படி ரூபா 4,177,805 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அந்த வேறுபாடு 2004

ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு திணைக்களத்தால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) திணைக்களத்தால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை மீதிப்பட்டியலின் கூட்டுத்தொகையையும் காலப்பகுப்பாய்வில் குறிப்பிடப்பட்ட மீதிப்பட்டியலின் கூட்டுத்தொகையையும் பரிசோதனை செய்த போது பின்வரும் வேறுபாடுகள் வெளிப்படுத்தப்பட்டது.

| | **அறவிடப்படாத மீதிப் பட்டியலின் கூட்டுத்தொகை** | **காலப்பகுப்பாய்வின் படி மீதிப் பட்டியலின் கூட்டுத்தொகை** | **வேறுபாடு** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| ஓய்வு பெற்ற மற்றும் மரணித்த | 41,594,896 | 42,213,583 | 618,687 |
| வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட | 9,572,864 | 10,610,709 | 1,037,845 |
| அமைச்சு அல்லது திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற | 2,114,574 | 458,042 | 1,656,532 |

(iv) 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 94 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபத்தின் படி, தனிப்பட்ட மீதி வகைப்படுத்தலின் பொழிப்பில் காண்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு மீதிக்கும் உரிய தனிப்பட்ட பட்டியல் பட்டோலைகளாக தனித்தனியாகக் தயாரித்து வகைப்படுத்தப்பட்ட பொழிப்புடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கொழும்பு மற்றும் அநுராதபுரம் போக்குவரத்து அத்தியட்சகர் அலுவலகத்திற்குரிய ரூபா 15,913,118 தொகையான கடன் மீதிக்குரிய எவ்வித தனிப்பட்ட மீதிப்பட்டியலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 13 உப திணைக்களங்களில் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 336 ஊழியர்களிடமிருந்து அறவிடாது நீண்ட காலத்திலிருந்து கொண்டு வரப்படுகின்ற கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 9,572,864 இனை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 02 உப திணைக்களங்களில் வேலை நீக்கஞ் செய்யப்பட்ட ஊழியர்களிடமிருந்து அறவிடாது நீண்ட காலத்திலிருந்து நிலவையாகக் கொண்டு வரப்படுகின்ற கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 160,648 இனை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 18 உப அலுவலகங்களிலிருந்து மரணித்த மற்றும் ஓய்வு பெற்ற 672 உத்தியோகத்தர்களினால் பெறப்பட்ட கடன் பணத்திலிருந்து நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 41,594,896 தொகையான கடன் மீதி தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5, 4.4 மற்றும் 4.5 என்ற பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணம் பிரதான கடனாளியிடமிருந்து அறவிட முடியாத சந்தர்ப்பங்களின் போது அப்பணம் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் சேவையை விட்டுச்சென்ற 18 உப அலுவலகங்களில் 2,817 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 19,970,942 கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் ஒரு உத்தியோகத்தர் வேறு கூட்டுத்தாபனத்திற்கு அல்லது சபைக்கு விடுவிக்கப்பட வேண்டுமாயின் அதற்கு முன்னர் பெறப்பட்ட கடன் தொகை அல்லது பணம் மீளச் செலுத்துவதற்கு எஞ்சியிருக்குமாயின் அந்தப் பணம் முழுவதையும் செலுத்தி முடியும் வரை அச்சேவைக்கு விடுவிக்க கூடாத போதிலும் புகையிரதத் திணைக்களத்தின் நாவலப்பிட்டி உப புகையிரத திணைக்களத்தில் சேவையாற்றிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 05 வருடங்களை விட பழமையான ரூபா 58,940

தொகையான கடன் மீதி அறவிடப்படாமல் விடுவிக்கப்பட்டிருந்தனர். 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(x) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11.9 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனக் கடன் பெற்ற உத்தியோகத்தர் திணைக்களத்தின் தலைவருக்கு உறுதியினைச் சமர்ப்பிக்கும் போது அது இரத்துச் செய்ய முடியாத அட்டோனி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அக்காணி அமைந்துள்ள மாவட்டத்தின் காணிப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டிய போதிலும் 1998 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை ரூபா 10,524,293 கூட்டுத்தொகையான ஆதனக் கடன் வழங்கப்பட்ட 39 உறுதிகள் 2014 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு பதிவு செய்வதற்காக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xi) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் காணியைப் பதிவு செய்வதற்காக அனுப்பப்படுகின்ற அட்டோனி அதிகாரத்தை கையளிக்கும் ஆவணங்கள் முறையான பிரகாரம் பதிவு செய்யப்பட்டு தாமதமின்றி தமக்கு மீளப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத் தலைவர் கவனம் செலுத்த வேண்டியிருந்ததுடன் கடன் பணம் செலுத்தி 6 வாரங்களுக்குள் அந்தச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 1998 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையான காலத்தில் செலுத்தப்பட்ட ரூபா 4,234,500 தொகையான ஆதனக் கடனுக்கான 14 உறுதிகள் இரத்துச் செய்ய முடியாத அட்டோர்னி அதிகாரம் பதிவு செய்வதற்காக அனுப்பப்பட்டிருந்த போதிலும் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் இரத்துச் செய்ய முடியாத அட்டோர்னி அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xii) 6 உப திணைக்களங்களிலிருந்து வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,265,744 தொகையான கடன் மீதி தொடர்பாக 1994 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம்

நடவடிக்கை எடுத்து அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஓ) களஞ்சிய முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆண்டின் இறுதியில் இருப்பின் பெறுமதி, சகல இருப்புக்களையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் பௌதிக இருப்புப் பரிசோதனையின் பின்னர் மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறில்லாத போது தொடர்ச்சியாக இருப்புக் கட்டுப்பாட்டு முறைமை முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். அந்த ஏற்பாடுகள் பின்பற்றப்படாது மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 4,182,377,408 தொகையானது புத்தகங்களில் காணப்படுகின்ற பெறுமதி இறுதியிருப்பின் பெறுமதியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ii) பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக 1980 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு இறுதிவரையான காலத்தில் வழங்கப்பட்டு 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 80,416,102 ஆகும். மீளாய்வாண்டில் அவ்வாறு வழங்கப்பட்ட முற்பணங்களிலிருந்து தீர்க்கப்படாதிருந்த பெறுமதி ரூபா 12,917,985 ஆகும். இந்த முற்பணத்தைத் தீர்ப்பதற்கோ அல்லது உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 1993 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பொருட்கள் இறக்குமதி செய்யும் போது சுங்கக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 145,846,502 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இருப்பில் சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 1993 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை தீர்க்கப்படாத நிலுவையாக இருந்த சுங்கக் கட்டணம் ரூபா 24,199,554 ஆகும். பல வருட காலமாக முன்கொண்டு வரப்படுகின்ற அந்த மீதியை

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 1998 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை தீர்க்கப்படாத நாணயக் கடிதங்களின் பெறுமதி ரூபா 120,093,558 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தப் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) காலாவதியாகிய மற்றும் பயன்படுத்தப்படாத பொருட்களிலிருந்து எழுந்த நட்டமாக ரூபா 13,829,758 தொகையான மீதி பல வருட காலமாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அம் மீதிகளைப் பதிவழிப்பதற்காக உரிய நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) கடந்த 09 வருட காலத்தில் களஞ்சிய இருப்புக்கள் ரூபா 1,905 மில்லியன் முதல் ரூபா 4,031 மில்லியன் வரையிலான வீச்சில் காணப்பட்டது. அந்த 09 வருடங்களில் 08 வருடங்களின் போது உரிய ஆண்டின் கொள்வனவுகளிலிருந்து குறைந்த அளவு மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கையிலுள்ள இருப்பு 09 வருட காலத்தில் இரு மடங்காகியிருந்தது.

(viii) காணப்படுகின்ற சராசரி இருப்பு, விநியோகிக்கப்பட்ட இருப்பின் 305 சதவீத பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும் இந்த இருப்பு தொடர்பாக உரிய மதிப்பீட்டைச் செய்து பாவனைக்கு எடுக்கப்படாத இருப்புக்களை பொருத்தமான முறையில் கைதவிர்ப்புச் செய்வதற்கு முகாமையால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ix) மீளாய்வாண்டின் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட இருப்பின் பெறுமதி ரூபா 4,182,377,408 ஆக இருந்தது. அந்த இருப்பில் அசையாத இருப்பின் பெறுமதி ரூபா 185,199,808 தொகை மற்றும் மெதுவாக அசையும் இருப்பின் பெறுமதி ரூபா 913,920,318 ஆக இருந்ததுடன் அது மொத்த இருப்பில் முறையே 4.43 சதவீதம் மற்றும் 21.85 சதவீதமாக இருந்தது.

(x) நிலையான வீதி உபகரணங்களின் சராசரி இருப்பு ரூபா 4,472 மில்லியனாக இருந்த போதிலும் பொருட்கள் எதுவும் மீளாய்வாண்டின் போது விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(xi) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் இருப்பு 61.951 மில்லியன் தொகையாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது விநியோகித்தல் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(xii) சகல இருப்பு விடயங்களினதும் இருப்பு சுழற்சி விகிதாசாரம் மீளாய்வாண்டில் ஒன்றை விட குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது.

(xiii) நிதிப் பிரமாணம் 102 மற்றும் 760 இன் பிரகாரம் நட்ட இழப்பாக இனங்காண வேண்டிய ஆயுட்காலம் முடிவடைந்த இருப்புகள், பல்வேறு அலகுகள் மற்றும் பொருட்கள் களஞ்சியத்தில் துருப்பிடிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கொள்வனவுகள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அந்நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 1975 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலத்தில் காணாமல் போயிருந்த மற்றும் களவுபோன 51 பொருள் விடயங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

----------------------------------------------------------------------

### 2.3.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

----------------------------------------------------------------------

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் இலங்கை புகையிரதத் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 ஆகஸ்ட் 27 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை அமுல்படுத்தல்

2013 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 03 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

### 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதாளிக்கப்பட்டன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | **சொத்து வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** | **விளைவற்ற அல்லது குறைவான பயன்பாட்டுடனான காலம்** |
|---|---|---|---|
| (i) | காணி (ஏக்கர்) | 1490 | 25 வருடங்களுக்கு மேல் |
| (ii) | உத்தியோகபூர்வ வீடுகள் | 963 | காலப்பகுதி வழங்கப்படவில்லை |
| (iii) | கார், பஸ் | 02 | 10 வருடங்களுக்கு மேல் |
| (iv) | இயந்திரங்களும் என்ஜின்களும் | 43 | 25 வருடங்களுக்கு மேல் |

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச்சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த மெய்மையாய்வுச் சபை அறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்திற்குச் சொந்தமான 861 கிளை அலுவலகங்களிலிருந்து 276 கிளை அலுவலகங்களின் மெய்மையாய்வுச்சபை அறிக்கைகள் மாத்திரம் 2014 மே 31 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) புகையிரத திணைக்களத்தின் பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டு பல வருட காலமாக பழைய பாவிக்கப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 771(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கைதவிர்க்கப்பட வேண்டிய மற்றும் விற்பனையால் வருமானமொன்றைப் பெறக்கூடியதான பொருட்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 747 இன் பிரகாரம் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு விற்பனை செய்தல் அல்லது நிதிப்பிரமாணம் 772 இன் பிரகாரம் ஏலத்தில் விற்பனை செய்தல் அல்லது அவ்வாறு கைதவிர்க்கப்பட முடியாத பொருட்கள் நிதிபப்பிரமாணம் 770 இன் படி அழிப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கிழே காண்பிக்கப்படுகின்றது.

| | சொத்து வகை | சொத்துக்களின் எண்ணிக்கை / அலகுகளின் எண்ணிக்கை / அளவு | சொத்து வழங்கப்பட்ட நிறுவகம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | |
| (i) | கட்டிடங்கள் | 01 ஏக்கர் 25.75 பேர்ச் | போக்குவரத்து அமைச்சு | 6,600,000 | குறிப்பிடப்படவில்லை |
| (ii) | மோட்டார் வாகனங்கள் | 04 | போக்குவரத்து அமைச்சு | சமர்ப்பிக்கப்படவில்லை | 2013 சனவரி |

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

இலங்கை புகையிரதத் திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத 01 வருடத்திற்குக் குறைந்த காலத்திற்குரிய பொறுப்புக்கள் ரூபா 77,940,796 ஆகும்.

## 2.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 101,102,103,104 மற்றும் 110 | 195,350 | (i) 2013 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 195,350 தொகையான நட்ட இழப்புத் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 700,000 | (ii) பெம்முல்ல மற்றும் வெயங்கொடை புகையிரத நிலையத்திற்கிடையே பொருத்தப்பட்ட 102 ஆம் இலக்க ரிலே கூடாரத்திற்கு சேதம் ஏற்பட்ட போது ரூபா 700,000 பெறுமதியான பற்றரி மற்றும் மின்சார பாகங்கள் களவாடப்பட்டு 16 வருடங்களை விஞ்சிய போதிலும் ஆரம்ப பரிசோதனை நடாத்துதல், காணாமல் போன ஆவணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் நட்ட இழப்புக்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | 46,899 | (iii) 1996 நவம்பர் 11 ஆந் திகதி திணைக்களத்திற்குரிய ஒரு வாகனம் விபத்திற்குள்ளாகியமையால் |

| | | | |
|---|---|---|---|
| | | | நிதிப்பிரமாணம் 105(1) இன் கீழ் ரூபா 6,899 தொகையில் கணிப்பிடப்பட்ட நட்டம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 1993 செப்தெம்பர் 20 ஆந் திகதி ஏற்பட்ட விபத்தின் காரணமாக வாகனத்திற்கு ஏற்பட்ட கணிப்பிடப்பட்ட நட்டமான ரூபா 40,000 தொகைக்குரிய பதிவேடு காணாமல் போனமையால் அறவீடு செய்ய முடியாதிருந்தது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 175 (ஆ) | 179,800 | 04 நிறுவனங்களில் நிலுவை புகையிரத அனுமதிச்சீட்டு வருமானம் ரூபா 179,800 ஆக இருந்த போதிலும் அது தொடர்பாக அறிக்கைகளில் உரியவாறு பதிவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 177 | 148,449,593 | புகையிரத நிலையங்கள் மூலம் பிரதான கணக்காளருக்கு அனுப்பப்பட்ட பணத்திற்காக அப்பணம் பெறப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு பிரதான கணக்காளரால் அப்புகையிரத நிலைய அதிபர்களுக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 148,449,593 கூட்டுத்தொகை அனுப்பப்பட்டமைக்காக அவ்வாறு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 371(2) | 31,034,324 | 1998 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வழங்கப்பட்டு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 31,034,324 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி |

| | | | |
|---|---|---|---|
| | | | தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 702 | 40,870,160 | சட்டமா அதிபரால் அங்கீகரிக்கப்பட்ட படிவங்களுக்கு இணங்க, உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாமலும் வெளிப்படையின்றியும் புகையிரத பெட்டிகள் வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டமையால் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதியளவில் கணிப்பிடப்பட்ட ரூபா 40,870,160 தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டு திறைசேரிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) சனாதிபதி செயலகத்தின் சுற்றுநிரூபம்

--------------------------------------

| | | | |
|---|---|---|---|
| | 2012 ஏப்ரல் 09 ஆந் திகதிய PCMD/AD/2/1/1/26 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் (ஆ) பந்தி | | புகையிரதத் திணைக்களத்தில் அறவிடப்படாத கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பாக நிறுவனத் தலைவர் எவ்வித பொறுப்புடன் இருந்தமைக்கு கணக்காய்வு ஐய வினாக்களுக்கு அனுப்பியுள்ள பதிலின் படி கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. |

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை

-----------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2.4.3, 2.6.1(அ)(i) மற்றும் 7.4.1 ஆம் வழிகாட்டிகள் | 3,375,106 | புகையிரத என்ஜின்கள், பெட்டிகள் மற்றும் கல் வண்டிகள் பழுதுபார்ப்பதற்காக பெறப்பட்ட 11 விடயங்களின் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக முன்னுரிமை |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்கப்படாதிருந்ததுடன் அந்த செயற்பாடுகளில் தாமதம் அவதானிக்கப்பட்டது. |
| (ii) | 4.2.2 வழிகாட்டி | 3,375,106 | புகையிரத என்ஜின்கள், பெட்டிகள் மற்றும் கல் வண்டிகள் பழுதுபார்ப்பதற்காக பெறப்பட்ட உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்கு 2013 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் நலிவுகள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திடடங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்டங்களின் தாமதம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

இலங்கை புகையிரதத் திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|
| | ------------------------------ | -------------------- | ---------------------------------------------------------------- |
| | | ரூபா | |
| (i) | புதிய புகையிரதச் சீட்டுக்கள் வழங்குதலும் ஆசன ஒதுக்கீட்டு முறையும் | 1,000,000 | செலவின விடயத்திற்காக மதிப்பீட்டு நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | புகையிரதப் பெட்டிகளை அமைக்கும் செயற்திட்டம் | 12,000,000 | பிரதான இயந்திரப் பொறியியல் (உப திணைக்களம்) இனால் தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமையால் உரிய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. |
| (iii) | புகையிரதப் பாதையை அமைப்பதற்காக உபயோகிக்கப்படும் நிரப்பும் இயந்திரக் கொள்வனவு | 1,000,000 | செலவிய விடயத்திற்கான குறியீட்டு ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும், செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | வடக்கு புகையிரதப் பாதைக்காக புகையிரத எஞ்ஜின்கள், பெட்டி போன்றவற்றின் கொள்வனவு | 1,000,000 | வடக்கு புகையிரதப் பாதையை மீள நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மூலம் இந்தியாவிலிருந்து வழங்குவதற்கு இணங்கப்பட்ட எஞ்ஜின் மற்றும் பெட்டிகளை வழங்குதலை நிராகரித்தல் |

| | | | |
|---|---|---|---|
| (v) | புகையிரதத்தை மின்சார மயப்படுத்தல் | 1,000,000 | மதிப்பீட்டு நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | சமிக்ஞை மற்றும் உள்ளக தொடர்பாடல் முறைமை | 1,000,000 | - மேற்படி - |
| (vii) | அநுராதபுரத்திற்கும் பொல்கஹவெலயிற்கும் இரு பாதை நிர்மாணம் | 1,000,000 | - மேற்படி - |
| (viii) | கோட்டை பால நிர்மாணம் | 1,000,000 | மேற்படி - |
| (ix) | களணி பால நிர்மாணம் | 1,000,000 | மேற்படி - |
| (x) | மருதானை, கோட்டை 30 வருட பழைய மணிக்கூட்டு முறைமையை புதிதாகப் பொருத்துதல் | 2,000,000 | புகையிரத நிலையத்திற்காக மிகவும் உகந்ததாக வடக்கு புகையிரத பாதையில் அமைக்கப்பட்டிருக்கும் கடிகாரம் தீர்மானிக்கப்பட்டமையால் அந்த கடிகாரத்தை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யாமல் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு தீர்மானித்தல் |

**(ஆ) செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் தாமதம்**

திணைக்களத்தின் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டது.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | |
| (i) | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டம் | 1,000,000 | 148,777 | பதவியணியினரில் காணப்படுகின்ற வெற்றிடங்களால் அவ்வப்போதான கடமைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்லும் நோக்கத்தில் பயிற்சியளிப்பதற்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதை வரையறுத்தல் |
| (ii) | சமிக்ஞை கைத்தொழில்சாலையில் 50 வருடங்கள் பழைமையான இயந்திர உபகரணங்களை பழுதுபார்த்தல் | 10,000,000 | 1,349,957 | கட்டளையிட்டு பெறப்பட்ட பொருட்களுக்காக கொடுப்பனவு செய்தல் தாமதமாகியமை |
| (iii) | சமிக்ஞை மற்றும் செய்திகளை மாற்று முறைமையைப் பொருத்துதல் | 40,000,000 | 11,532,546 | கட்டளையிடப்பட்ட பொருள் கிடைக்காமை |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | பிரதான வேலைப் பொறியியல் திணைக்களத்திற்காக இயந்திர சூத்திரங்களை மீளமைத்தல் | 50,000,000 | 5,756,174 | கொள்வனவு செய்யப்பட்ட சில இயந்திரங்கள் செயற்படுத்தப்பட்டு காண்பிக்கப்படாமையால் சில இயந்திரங்களைக் கொள்வனவு செய்யமுடியாதிருந்தமை. |
| (v) | கண்டி, பேராதெனிய, கடுகண்ணாவை முக்கோண புகையிரத அபிவிருத்திச் செயற்திட்டம் | 15,000,000 | 388,427 | நில அளவை உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக இருந்தமை |
| (vi) | களுத்துறை வடக்கு மற்றும் பயாகல தெற்கு என்பவற்றிக்கிடையே இரு வழிப்பாதையை நிர்மாணித்தல் | 200,000,000 | 8,036,174 | கொள்வனவு செயற்பாடுகள் 2013 ஆம் ஆண்டின் இறுதி அரைப்பகுதியிலேயே பூர்த்தி செய்யப்பட்டமை |

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் நலிவுகள்**

-----------------------------------------------------------------------------

செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) மதவாச்சி, மடு புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்காக இந்தியக் கம்பனி சமர்ப்பித்த ஐக்கிய அமெரிக்க டொலர் 84,055,739 தொகையான மொத்தக் கிரய அளவிடைப் பத்திரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் மதிபீட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவால் அவ்வேலையின் சிபார்சு செய்யப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 72,000,205 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் உரிய கம்பனியுடன் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதி கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் வேலையின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 81,305,739 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சினை விட ஐக்கிய

அமெரிக்க டொலர் 9,305,534 தொகை அதாவது 112.92 சதவீதத்திற்கு மேற்பட்ட பெறுமதியில் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) 2013 மே 16 ஆந் திகதி ஓமந்தை தொடக்கம் பளை வரையான வடக்குப் பாதையில் புகையிரத ஓட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆகஸ்ட் 30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அப்பாதையின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் பாதை உரிய பிரகாரம் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் உடன்படிக்கையின் படி உரிய வேலை தாமதமாகும் ஒரு வாரத்திற்காக வேலையின் பெறுமதியில் 0.1 சதவீதம் (ஐக்கிய அமெரிக்க டொலர் 81,306) படி தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வடக்கு புகையிரதப் பாதைக்கு பயன்படுத்தப்படும் சகல சிலிப்பர் கட்டைகளுக்கான ஒப்பந்த மதியுரை நிறுவனமாக நியமிக்கப்பட்ட மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தால் புகையிரதப் பாதைக்கு பயன்படுத்தப்படும் சிலிப்பர் கட்டைகள் மற்றும் தண்டவாளங்களின் நிலைமை தொடர்பான பரிசோதனையை இலங்கையில் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உற்பத்திச் செயன்முறையின் போதோ அல்லது இந் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதன் பின்னரோ ஆய்வுகூட பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உற்பத்தி செய்த நாட்டினால் வழங்கப்பட்ட நிலைமை அறிக்கையின் அடிப்படையில் இந்த வேலையின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. மதவாச்சி மடு வீதியில் புகையிரதத்தை ஓட்டத்திற்கு கையளித்தன் பின்னர் அதாவது 2013 யூன் மாதத்தின் போது ஆலோசனைக் கம்பனியும் அதன் நிர்மாணக் கம்பனியும் ஒன்றினைந்து இப் பாதையின் ஒன்றினைந்து வெள்ளோட்ட பரிசோதனையை மேற்கொண்டிருந்தது. அப்பரிசோதனையின் போது 43 கிலோ மீற்றர் நீள அளவிற்கு பயன்படுத்தப்பட்ட ரூபா 20,571,936 பெறுமதியான 1,771 சிலிப்பர் கட்டைகள் பழுதடைந்தமையால் அகற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2014 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்திருந்தது.

(iv) பளை முதல் காங்கேசன்துறை வரையான புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்காக சர்வதேச கம்பனியுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் படி அதன் செயற்பாடுகள் 2014 யூன் 13 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2014 செப்தெம்பர் 03 ஆந் திகதி வரையிலும்

அவ்வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையான ஐ.அ.டொலர் 149.34 மில்லியனில் இருந்து 0.1 சதவீத அளவு ஒரு வாரத்திற்கான தாமத காலத்திற்காக (டொலர் 149.337) அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு தாமதக் கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பளை, காங்கேசன்துறை புகையிரத செயற்திட்டத்திற்காக தேவையான மொத்த தண்டவாளங்களின் அளவு 8,500 மெட்ரிக் தொன்களாக இருந்ததுடன் அதில் 7,000 மெட்ரிக் தொன் நேரடியாக புகையிரதத் திணைக்களத்தாலும் 1,707 மெட்ரிக் தொன் உரிய சர்வதேச கம்பனியாலும் வழங்கப்பட்டிருந்தன. சகல தண்டவாளங்களையும் கொண்டு செல்வதற்கான செலவினங்கள் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அவற்றால் 8,001 மெட்ரிக் தொன் தண்டவாளங்களின் அளவினைக் கொண்டு செல்வதற்கான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 707 மெட்ரிக் தொன் அதாவது ரூபா 149 மில்லியன் பெறுமதியான தண்டவாளங்கள் உரிய செயற்திட்டத்திற்காக கொண்டு செல்லப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

(vi) ஓமந்தை, பளை செயற்திட்டத்திற்கான பாதைக்கு ஈடுபடுத்தப்பட்ட சிலிப்பர் கட்டைகள் தொடர்பாக 2014 ஆகஸ்ட் 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பழுதடைந்த சிலிப்பர் கட்டைகள் அடையாளமிடப்பட்டிருந்தன. அதன்படி ரூபா 80 மில்லியன் பெறுமதியான சிலிப்பர் கட்டைகள் பழுதடைந்திருந்தன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது அவ்வாறு பழுதடைந்திருந்த சிலிப்பர் கட்டைகள் அகற்றப்பட்டு மீளவும் புதிதாக ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் அடையாளமிடப்பட்ட சிலிப்பர் கட்டைகளுக்கு மேலதிகமாக மேலும் பழுதடைந்த சிலிப்பர் கட்டைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. புகையிரதம் பயணம் செய்ததன் பின்னர் அறிக்கையிடப்பட்ட இந்த அசாதாரண நிலமையின் படி, செயற்திட்டத்தின் பொறுப்புக் காலம் (Deffect Liability) மேலும் நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) மதிப்பீடு தயாரிப்பதிலுள்ள நலிவுகளினால் ஓமந்தை, பளை செயற்திட்டத்தில் அசாதரணமாக ரூபா 374,189,504 பெறுமதியான சிலிப்பர் கட்டைகளும் தண்டவாளங்களும் பாவனைக்கு எடுக்கப்படாமல் எஞ்சியிருந்தது. அண்ணளவாக செயற்திட்டத்தின் தேவையினை மதிப்பீடு செய்யாமையால் இந்த

மீதி ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இப் பொருட்கள் பயன்படுத்தக்கூடிய அல்லது மாற்றுப் பாவனைகள் தொடர்பாக கண்டறிந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) ஓமந்தை முதல் பளை வரை புகையிரதம் 2013 திசெம்பர் 15 ஆந் திகதி தொடக்கம் ஓடிய போதிலும் சர்வதேசக் கம்பனியும் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகமும் (CECB) ஒன்றினைந்து மேற்கொண்ட இறுதிப் பரிசோதனை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 09 மாதங்களுக்கு அண்மித்த காலம் புகையிரதம் ஓடிய போதிலும் திணைக்களத்தால் பாதை கையேற்கப்படாமையால் செயற்திட்ட மதியுரை நிறுவனத்திற்கு ரூபா 23 மில்லியன் தொகையும், செயற்திட்ட பதவியணியினருக்கு ரூபா 2.7 மில்லியன் தொகையுமாக தொடர்ச்சியாக அவசியமற்ற கால நீடிப்பினால் சம்பளம் மற்றும் ஏனைய செலவினங்கள் அவசியமற்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தன.

(ix) மடு - தலை மன்னாருக்கிடையே புகையிரதப் பாதையை நிர்மாணிக்கும் செயற்திட்ட உடன்படிக்கையின்படி 2011 மார்ச் 29 ஆரம்பிக்கப்பட்டு 2013 செப்தெம்பர் 29 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்ட வேண்டிய போதிலும் 2014 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், செயற்திட்ட நிர்மாணக் கம்பனி அ.டொலர் 164.07 மில்லியன் விலை முரண் சமர்ப்பித்திருந்த போதிலும், கால நீடிப்பு மற்றும் அந்த விலை முரண் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த செயற்திட்டத்தின் 02 பிரதான பாலத்தின் கொங்கீரிட் தூண் (305 கி.மீ மற்றும் 307 கி.மீ) நிர்மாணம் வெற்றியடையாதிருந்தமை மற்றும் அப் பாலத்திற்காக கொண்டுவரப்பட்ட இரும்புப் பாலம் குறித்த நியமத்தில் இல்லாமையால் இந்த செயற்திட்டம் அதிக காலம் தாமதமடைவதற்கு காரணமாக இருந்தது. பாதையின் நிர்மாணம் 95 சதவீதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதன்படி பாதையை கையளிப்பதற்கு தாக்கமளித்த பிரதான தடையும் இந்த பாலமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. செயற்திட்ட மேற்பார்வை மதியுரைக் கம்பனியான மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் மேற்பார்வையின் நலிவுத் தன்மையும் இதற்காக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(x) வடக்கு புகையிரதப் பாதையின் சமிஞ்ஞை மற்றும் மின் குறியீட்டு முறைமையைப் பொருத்தும் செயற்திட்ட மேற்பார்வைக்காக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் நியமிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின்

8.3 ஆம் நிபந்தனையின் படி ஆலோசனை ஒப்பந்தக்காரல் ஒப்பந்தக்காரருக்குக் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்த நிகழ்ச்சித்திட்டம் மேற்பார்வை செய்யப்பட்டு பொருத்தமான வகையில் அவற்றைத் திருத்தி ஒப்பந்தக்காரருக்கு வழங்கி அதன் பிரகாரம் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த செயற்பாடுகள் தொடர்பாக மேற்பார்வை செய்யப்பட்டமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

## 2.7 செயலாற்றல்

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி, இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் பணிகள் மற்றும் வேலைகள் உப திணைக்களத்தின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) மாவட்ட பொறியியல் (வடக்கு) அலுவலகத்தில் 2013 ஆம் ஆண்டிற்காக புதிய 24 வேலைத் திட்டங்களுக்காக ரூபா 63,050,000 தொகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 25,477,958 தொகை அதாவது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 40 சதவீதமான அளவு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) மூலதனச் செலவின விடயத்தின் கீழ் 30 செயற்பாடுகளுக்காக ரூபா 32,900,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் இரண்டு செயற்பாடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அந்த இரண்டு செயற்பாடுகளுக்காக மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 380,000 இனால் மிகைத்து பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உரிமை கோரப்படாத பராயமடையாதவர்களின் கணக்கு

------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தில் சேவையாற்றிய, மரணித்த உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு உரித்தான விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம் பராயமடையாத கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 1927 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது 18 வயதைப் பூர்த்தி செய்த 1,482 பராயமடையாதர்களுக்காக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 1,733,896 கூட்டுத்தொகையான வைப்பு மீதி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரிய உரித்தாளிகள் தொடர்பாக கண்டறிந்து உரிமை கோரப்படாத பணத்தை விடுவிப்பதற்கோ அல்லது அப் பணத்தை திறைசேரிக்கு அனுப்புவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புகையிரதம் இரத்துச் செய்யப்படுதலும் தண்டவாளத்தை விட்டு விலகுதலும்

------------------------------------------------------------------------------------------------------------------------------

புகையிரத பயணத்தின் செயற்திறனின்மை மற்றும் புகையிரதப் பிரயாணிகளின் நம்பிக்கைத் தன்மை குறைவடைந்தமைக்கு புகையிரதத்தின் தாமதம், புகையிரதத்தின் பிரயாணத் தடவை இரத்துச் செய்தல், புகையிரதம் தண்டவாளத்தை விட்டு விலகுதல் மற்றும் புகையிரத காப்பாளர்கள் இன்மை போன்ற பிரதான விடயங்கள் காரணமாக இருந்தன. 2013 ஆம் ஆண்டின் போது 11,629 புகையிரத பிரயாணத் தடவைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது 7,490 ஆக இருந்தது. இப் பெறுமதி ஓடுவதற்கு குறிப்பிடப்பட்ட பிரயாணத் தடவைகளின் எண்ணிக்கை 9.15 சதவீத அளவாக இருந்தது. அதனை முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 3.04 சதவீதம் அதிகரித்திருந்தது.

## 2.8 வங்கிக் கணக்குச் செயற்பாடுகளில் குறைபாடுகள்

--------------------------------------------------------------------------------

புகையிரத பொது முகாமையாளரின் சேகரித்தல் கணக்கு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 395(இ) இன் பிரகாரம் ஒவ்வொரு மாத இறுதியின் போதும் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் திணைக்களத்தால் வங்கி இணக்கக் கூற்று

தயாரிக்கும் போது 05 மாத அளவிலான தாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 395(ஈ) இன் பிரகாரம் காசாகாத காசோலைகள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 சனவரி மாதம் முதல் ரூபா 1,600,550 தொகையான மீதி வங்கிக் கூற்றில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் 2014 மார்ச் மாதம் வரையிலும் அந்த மீதியை சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 மே மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டில் காசேட்டில் பிழையாக வங்கிக் கூற்றுக்கள் மீதியில் கழித்துக் காட்டப்பட்ட ரூபா 1,013,555 தொகையான மீதி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்த்து வைப்பதற்கு அல்லது பொறுப்புவாய்ந்த தரப்பினரை உறுதிப்படுத்துவதற்கு பரிசீலனை மேற்கொள்ள 2014 யூலை 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

இலங்கை புகையிரதத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவிலாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) களஞ்சிய முற்பணக் கணக்கிலிருந்து செலவிடப்பட வேண்டிய ரூபா 19,425,191 தொகை மீண்டெழும் செலவின விடயத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்தது. அதற்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,661,589 கூட்டுத்தொகையான மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினத்தின் கீழும், 16 சந்தர்ப்பங்களில் செலவிடப்பட்ட ரூபா 3,815,021 கூட்டுத்தொகையான மீண்டெழும் செலவினம் மூலதனச் செலவினத்தின் கீழும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) சொத்துக்கள் சேதமடைதல் என்ற அடிப்படையில் இனங்காணப்பட்ட ரூபா 106,108 பெறுமதியான நட்டம் அதற்குப் பொறுப்பான நாவலப்பிட்டி புகையிரத நிலைய அதிபராக சேவையாற்றிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடாமல்

ஓய்வுபெற்ற அவருக்கு அந்த ஓய்வூதியப் பணிக்கொடையும் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) திணைக்களத்திற்குத் தேவையான சகல பொருட்களும் கொள்வனவு செய்தல் உப திணைக்களத்தால் நிறைவேற்றும் நோக்குடன் அதற்கு 33 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டு உப திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அந்த உப திணைக்களத்தின் செயற்திறனின்மையின் அடிப்படையில் ஏனைய உப திணைக்களமும் அவர்களின் கொள்வனவு செயற்பாடுகளை தனித்தனியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. 2013 ஆம் ஆண்டில் இரத்மலானை பிரதான எந்திரப் பொறியியலாளரின் கொள்வனவு செய்யும் 2077 சந்தர்ப்பங்களில் 325 சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் களஞ்சிய உப திணைக்களத்தின் மூலம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இரத்மலானை பிரதான எந்திர பொறியியல் திணைக்களத்தின் மூலம் சாத்தியவள ஆய்வு அறிக்கை பெற்றுக்கொள்வதில் தாமதமும் கொள்வனவு செய்யும் கொள்வனவு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதத்தினாலும் களஞ்சிய உப திணைக்களத்தின் மூலம் கொள்வனவுகள் அதிக தாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பிரதான எந்திரப் பொறியியல் திணைக்களத்திற்குத் தேவையான கொள்வனவுகளைச் செய்வதற்கான தேவை அதற்கு முன்னைய ஆண்டின் போது கோரப்பட வேண்டிய போதிலும், அத் தேவை 2013 செப்தெம்பர் மாதத்தின் போது களஞ்சிய அத்தியட்சகருக்கு அறிவித்து அனுப்பியதிலிருந்து 09 மாதங்கள் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அவசர கொள்வனவாக பிரதான எந்திரப் பொறியியலாளரால் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்த இருப்பு விடயங்கள் கட்டளையிடப்பட்ட திகதி முதல் களஞ்சியத்திற்கு கிடைப்பதற்கு எடுத்த காலம் 04 மாதங்கள் முதல் 21 மாதங்கள் வரை தாமதமான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(உ) புகையிரத களஞ்சிய முற்பணமாக ரூபா 19,425,191 தொகை களஞ்சிய முற்பணக் கணக்கில் செலவினமாக கணக்கு வைக்கப்படாமல் அது மீண்டெழும் செலவின விடயத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. அப் பொருட்கள் பெறப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு பொருள் பெறுவனவுப் பத்திரம் அல்லது கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட நிலுவை வருமானக் கூற்றில் புகையிரத ஆணைச்சீட்டு நிலுவை வருமானம் ரூபா 431,569,008 இனாலும், வியாபார அனுமதிப்பத்திர நிலுவை வருமானம்

ரூபா 21,962,915 இனாலும், என மொத்த நிலுவை வருமானம் ரூபா 453,531,923 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.10 மோசடியான வடிவிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

---

இரத்மலானை கட்டிட பரிசோதகர் அலுவலகத்தில் வேலை பூர்த்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட 12 இரும்பு வாயிற் கதவுகளில் 07 கதவுகளின் பௌதீக பரீட்சிப்பின் போது அதில் ரூபா 95,400 பெறுமதியான 02 வாயிற் கதவுகளின் விநியோகித்தல் தொடர்பாக வாயிற் கதவு அனுமதிப்பத்திரம் காணப்படாதிருந்ததுடன் கட்டிட பரிசோதகர் அலுவலகத்தின் விநியோகித்தல் பதிவேடுகளிலும், பதிவு செய்யப்படாமல் எடுத்து செல்லப்பட்டிருந்தது. அவ்வாறே ரூபா 15,000 பெறுமதியான வாயிற் கதவும் காணாமல் போயிருந்தது.

**2.11 நட்டமும் இழப்பும்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) வருடாந்த தேவையினை மதிப்பீடு செய்து ஒரே தடவையில் கொள்வனவு செய்யாது அவ்வப்போது பல்வேறு விலைகளின் கீழ் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனால் ஒரே இருப்பு விடயங்களின் 02 வகை சில சந்தர்ப்பங்களின் போது வெவ்வேறு விலைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டமையின் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 195,739 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை விடுவிக்கும் நடவடிக்கைகள் தாமதமடைந்தன் அடிப்படையில் 2013 மே 23 ஆந் திகதி துறைமுகத்தில் ஏற்பட்ட தீயினால் ரூபா 77,040,268 பெறுமதியான பொருட்கள் அழிவடைந்திருந்தது. அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் ஆரம்பக் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 104(1) இன் படி உரிய நட்டத்தை இனங்காண்பதற்கோ அல்லது பொறுப்புவாய்ந்த தரப்பினரை தீர்மானிப்பதற்கோ அல்லது பரிசோதனை மேற்கொள்வதற்கோ 2014 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) களஞ்சிய உப திணைக்களத்தின் துறைமுக விடுவிப்பு நடவடிக்கைகளுக்காக விடுவிப்பு பிரிவொன்றை ஸ்தாபித்து அதில் இரண்டு பதவியணியினர் இருந்த போதும், உடன்படிக்கையின்றியும் முறையற்ற விதத்திலும் இரண்டு பொருள் விடுவிப்பு முகவர் கம்பனிகள் நியமிக்கப்பட்டிருந்தன. எனினும் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற பொருட்கள் குறிப்பிட்ட திகதிகளில் துறைமுகத்திலிருந்து விடுவித்துக்கொள்ளாமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 13,002,362 தொகையான தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 08 பொருள் விடயங்கள் சில சந்தர்ப்பங்களில் அவ்வப்போது கொள்வனவு செய்த போது பல்வேறு விலைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 331,079 அளவிலான சிக்கனமற்ற கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) அநுராதபுரம் கட்டிட பரிசோதனைப் பிரிவினால் 05 வேலைகளுக்காக 09 பொருள் விடயங்கள் மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 165,296 தொகையான சிக்கனமற்ற கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) திருகோணமலை ஓட்டக் கூடத்தில் இரயில் பஸ் எரிபொருள் பயன்படுத்துதல் தொடர்பாக உரிய கட்டுப்பாடு முறையொன்று காணப்படாமையால் 2013 ஆம் ஆண்டின் 10 மாத காலத்திற்கு மாத்திரம் ரூபா 285,789 தொகையான சிக்கனமற்ற எரிபொருள் பயன்பாடு இடம்பெற்றிருந்தது.

(உ) புகையிரத என்ஜின் மற்றும் பெட்டிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற Axle Drive விடயம் களஞ்சிய இருப்பில் 08 அலகுகள் காணப்பட்டன. கடந்த 05 வருட காலத்தில் அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அவ்வாறான 30 உருப்படிகள் ரூபா 20,693,098 செலவு செய்து வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அவை பாவனைக்கு எடுக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. அக் கொள்வனவுகளின் போது தாமதக் கட்டணமாக ரூபா 496,657 தொகை செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) நீண்ட காலமாக புகையிரதச் சீட்டு பரிசோதகர்கள் மற்றும் புகையிரத பாதுகாப்பு பிரிவின் உத்தியோகத்தர்களினால் புகையிரத நுளைவுச்சீட்டு இன்றி பிரயாணம் செய்கின்ற பிரயாணிகளிலிருந்து நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற தண்டப்பணத்தில் 10 சதவீதம் திறைசேரியின் அங்கீகாரமின்றியும் கணக்காளரின் மேற்பார்வை மற்றும் அங்கீகாரமின்றியும் வெகுமதியாக புகையிரத நிலையங்களிலிருந்து பெறப்பட்டிருந்தது. இவ்வாறு செலுத்தப்பட்ட வெகுமதிப் பணம் அல்லது சேகரிக்கப்பட்ட தண்டப் பணம் தொடர்பாக ஒப்பிடப்பட்டிருக்கவில்லை.

(எ) கட்டளையிடப்பட்ட ரூபா 1,446,455 பெறுமதியான வெற்று நுழைவுச்சீட்டு இருப்புக்களில் இருப்பு இலக்கத்திற்குரித்தல்லாத 400,000 வெற்று நுளைவுச்சீட்டுக்களும் பழுதடைந்த 2,652,900 வெற்று நுளைவுச்சீட்டுக்களும் காணப்பட்டன. இலக்கத்திற்குரித்தற்ற இருப்பினை மீள அனுப்பி அதற்குப் பதிலாக சரியான இலக்கத்தில் இருப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும், பழுதடைந்த இருப்புக்களுக்காக காப்புறுதி இழப்பீடு பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட இருப்புகள் தொடர்பாக கைதவிர்க்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஹுனுப்பிட்டி புகையிரத நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள முன்னர் தோற்பொருள் கூட்டுத்தாபனத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்ட புகையிரதத் திணைக்களத்திற்குரிய கட்டிடம் மற்றும் அதற்கு அண்மையில் அமைந்துள்ள மேலும் ஒரு கட்டிடம் என்பன வருமானம் உழைக்கக் கூடிய வகையில் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 2.13 முகாமைத்துவ நலிவுகள்

----------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏ.எம்.எஸ் 01 ஆம் இலக்க புகையிரதம் இருதரப்பு உடன்படிக்கை மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டதன் படி வாடகைக்கு வழங்கப்பட்ட காணி தொடர்பாக வாடகை உடன்படிக்கை 05 வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வணிகப் பிரிவில் காணப்படுகின்ற 17 காணி குத்தகை கோவைகளுக்காக உரிய குத்தகை காணிகளின் பயனடைகின்ற நபர்கள் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது அந்தக் காணிகளிலிருந்து பயனடைகின்றவர்கள் தொடர்பான தகவல்கள் புகையிரத பாதுகாப்பு சேவை படையணியால் பரீட்சிக்கப்பட்டு அறிக்கையிடுமாறு கோரியிருந்தும் அதற்காக 1 வருடமும் 03 மாதங்கள் முதல் 13 வருடங்கள் வரையிலான காலப்பகுதி எடுத்த போதிலும் பயன்பாட்டு அறிக்கை கிடைக்காமையால் பழைய குத்தகையாளரின் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கோ அல்லது புதிய குத்தகையாளருக்கு மீளவும் குத்தகைக்கு வழங்கி உழைக்கக் கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) 07 குத்தகை கோவைகளுக்குரிய 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 8,687,906 ஆக இருந்ததுடன் அத்தொகையை அறவிடுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஈ) மதிப்பீடு செய்தல், உடன்படிக்கையை புதுப்பித்தல், பட்டியல்களைத் தயாரித்தல், நிலுவை வாடகையை அறவிடல், கோவைகளை நாளதுவரையாக்குதல் மற்றும் நாளதுவரையாக்கப்படாத கோவைகளுக்காக பயன்பாட்டு அறிக்கை பெற்று எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் 07 குத்தகை கோவைகள் 10 வருடங்கள் முதல் 41 வருடங்கள் வரையான காலப்பகுதியில் செயற்பாடற்றுக் காணப்பட்டமையால் பெறக்கூடியதாக இருந்த வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(உ) புகையிரதத் திணைக்களத்தில் 3,928 உத்தியோகத்தர்களின் ஆதனக் கடன், இடர் கடன் மற்றும் விழா முற்பணமாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 56,509,696 தொகையான நிலுவை மீதி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டது. நிர்வாக மற்றும் கணக்குப் பிரிவு உத்தியோகத்தர்களின் கவனமின்மையின் அடிப்படையில் அறவிடப்படாது காணப்பட்ட அக்கடன் மீதிக்காக வருடாந்தம் அறவிட வேண்டிய வட்டியும் அரசினால் இழக்கப்பட்டிருந்தது. இந்த நிலுவையாக இருந்த மீதியை அறவிடுதல் இடரொன்றாக இருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 1,194,உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட ஆதனக் கடனிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 49,561,770 தொகையான கடன் மீதி

அறவிடப்படாது காணப்பட்டது. அந்தக் கடனாளிகளால் காணியின் உரித்தை இரத்துச் செய்யமுடியாத அட்டோர்னி அதிகாரத்தால் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அதனை அடிப்படையாகக் கொண்டு காணியை அரசாங்கத்திற்கு கையேற்பதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ அல்லது நிலுவைக் கடன் மீதியை அறவிடக் கூடியதாக இருந்தும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) இரத்மலானையில் அமைந்துள்ள 680 புகையிரத உத்தியோகபூர்வ வீடுகள் திணைக்களத்தின் பிரதான நீர் வழங்களிலிருந்து நீர் வழங்கப்பட்டிருந்ததுடன் நீண்ட காலமாக அந்த வீடுகளில் நீர்மானிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. இந்த வீடுகளுக்கிடையே அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்ட வீடுகளும் காணப்பட்டதுடன் அந்த வீடுகளுக்காகவும் இந்த நீர் வழங்களிலிருந்து நீர் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வின் போது அது தொடர்பாக சுட்டிக் காண்பித்திருந்த போதிலும் அந்த வீடுகளுக்கு தனித்தனியாக நீர் வழங்குவது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட நீருக்காக ரூபா 59,403,551 தொகை திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது.

(ஏ) 12 புகையிரத நிலையங்களுக்குரிய 61 விடுகளில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து வீட்டு வாடகையாக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியை கவனத்தில் கொள்ளாது முகாமைத்துவத்தின் விருப்பத்தின்படி, வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. இதனால் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,306,714 தொகை குறைவாக வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(ஐ) போக்குவரத்து அமைச்சின் கௌரவ அமைச்சரின் பதவியணியினதும் அமைச்சின் செயலாளரின் பதவியணியினதும் உத்தியோகத்தர்களினால் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 569,272 பெறுமதியான 4,021 எரிபொருள் லீற்றர் (2008 லீற்றர் பெற்றோல் மற்றும் 2,013 லீற்றர் டீசல்) விநியோகிக்கப்பட்டிருந்தன. அந்தப் பெறுமதியை போக்குவரத்து அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் மூலம் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட வாகனங்களின் பழுதுபார்த்தலுக்காக ரூபா 134,619

தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்தச் செலவினங்களை மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.14 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 211 | 107 | 104 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 458 | 76 | 382 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 7,297 | 5,066 | 2,231 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 12,376 | 8,078 | 4,298 | - |
| (v) | ஏனையோர்(அமைய/தற்காலிக /ஒப்பந்த அடிப்படை) | - | 3,019 | - | 3,019 |
| | மொத்தம் | 20,342 | 16,346 | 7,015 | 3,019 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியளவில் 7,015 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) புகையிரத திணைக்களத்தின் நாட்சம்பள அடிப்படையில் நியமனம் கிடைத்த 50 ஊழியர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் போக்குவரத்து அமைச்சிற்கு இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தி புகையிரதத் திணைக்களத்தால் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்

--------------------------------------------------------------------------------------------------

உணவுத் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட இரண்டு வாப்பு எழுதுவினைஞர்கள் இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

**3. தலைப்பு 307 – மோட்டார் போக்குவரத்து திணைக்களம்**

--------------------------------------------------------------------------------------------------

**3.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

------------------------------------------------------

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

--------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும், வருமானக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) தொடக்கம் (ஊ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 3.4 தொடக்கம் 3.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்காய்வுச் சான்றுகள் இன்மை**

மீளாய்வாண்டின் போது கணக்காய்வுப் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ஆறு சந்தர்ப்பங்களின் போது கோரப்பட்ட 92 வாகனக் கோவைகள் 2015 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2015 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்காய்வு ஐய வினாக்களுக்காக அனுப்பப்பட்ட விளக்கமில்லாத, பூர்த்தியற்ற மற்றும் ஏற்றுக்கொள்ளமுடியாத பதில்கள் தொடர்பாக மீளவும் ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீள வழங்கப்பட்ட ஐயவினாக்களுக்காக 2015 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்த 08 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

**(இ) பாதீட்டு முரண்**

-------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 03 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 134,750,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 06 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டின் 50 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

--------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்பட வேண்டிய கட்டுநிதி மீதிகளில் ரூபா 78,490 தொகையான மீதி திணைக்களத்தில் 8 மாத தாமதத்தின் பின்னர் 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது தீர்க்கப்பட்டிருந்தது.

**(உ) வருமானக் கணக்குகள்**

----------------------------------------

திணைக்களத்தால் 2013 ஆம் ஆண்டில் 03 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 8,279 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 128(2) இன் படி ஆடம்பர மோட்டார் வாகன வரி வருமானத்திற்குரிய அரையாண்டு நிலுவை வருமானம் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களம் முறையானதாக ஆடம்பர வரி வருமான பதிவேட்டை நாளதுவரையாக்காமையால் முன்னைய ஆண்டுகளைப் போலவே மீளாய்வாண்டின்போதும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பிரமாணம் 128(2)(அ) இன் படியும் 2001 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் சுற்றுநிருபத்தின் 03 மற்றும் 05 ஆம் பந்திகளில் குறிப்பிட்டதன் படி வருமான எதிர்வுகூறல், மதிப்பீடு செய்தல் மற்றும் வருமான நிலையை முன்னைய காலங்களுடன் மீளாய்வு செய்யும் பொறுப்பு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

30701 ஆம் விட இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,634,020 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 3,488,088 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் படி வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

25 அச்சிடல் இயந்திரங்கள் (Mobil Smart terms) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

## 3.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வுசெய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (அ) நிதிப் பிரமாணம் 880 | அரசாங்கத்தின் பணம், வருமானம், முத்திரை அல்லது பொருட்கள் போன்றவற்றின் பொறுப்பை வகிக்கின்ற 612 உத்தியோகத்தர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க பிணைவைக்கப்பட வேண்டிய போதிலும். திணைக்களத்தால் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 1646 | வாகனப் பொறுப்பு உத்தியோகத்தரால் ஒவ்வொரு மாதமும் திணைக்களத்திற்குரிய குழாம் வாகனங்கள் தொடர்பாக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த சம்பவ அறிக்கை என்பன அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 செயலாற்றல்

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

திணைக்களத்தால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சொகுசு வரி அறவிடல்

1995 இன் 16 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சொகுசு வாகன வரி அறவிடும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக அப்பணியை போதியளவில் நிறைவேற்றாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) நிலுவை அரசாங்க வருமானம் தொடர்பான அறிக்கை காணப்படாததுடன் நிலுவை வருமான சேகரித்தலில் நலிவும் காணப்பட்டது.

(ii) வரித்தொகை சேகரித்தல் மற்றும் கிடைக்க வேண்டிய வரித்தொகை தொடர்பாக முறையான அறிக்கை வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வருமானக் கட்டுப்பாட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(iv) கணனி முறைமையிலும் அதன் செயற்படு தன்மையிலும் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) வரி அறவிடும் நடவடிக்கைகளை உரிய பிரகாரம் நிறைவேற்றாத காப்புறுதி நிறுவனங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) வரிக் கொடுப்பனவை புறக்கணிக்கின்ற வாகன உரிமையாளர்கள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) சொகுசு, அரை சொகுசு மற்றும் அரை சொகுசு இரு நோக்க செயற்பாட்டு வரி அறவிட வேண்டிய 02 வாகனங்களுக்கு அதன் வரித்தொகையை முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அந்த வரி அறவிடப்படாதிருந்த வரித்தொகை மற்றும் தண்டப்பணங்களின் பெறுமதி முறையே ரூபா 150,000 மற்றும் ரூபா 75,000 ஆக இருந்தது.

(vii) சொகுசு வரி அறவிடவேண்டிய 02 வாகனங்களும் அரை சொகுசு வரி அறவிடவேண்டிய 01 வாகனத்தையும் உள்ளடக்கிய 03 வாகனங்களிலிருந்து வரி அறவிடுதல் முழுமையாகக் கைவிடப்பட்டிருந்தன. இக் கைவிடல்களின் காரணமாக முதலாவது வரி வருடத்திற்குரிய ரூபா 360,000 தொகையான வரித்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ix) திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட செயற்பாட்டு நடைமுறைக் கோவையின் படி வாகனங்களைப் பதிவு செய்யும் போது அதன் சரியான தன்மை சில சந்தர்ப்பங்களின் போது சிலரின் பரிசோதனைக்கு உள்ளாகின்ற நிலைமையின் போதும் சொகுசு வரி/ அரை சொகுசு வரி என பிரிக்கப்பட்டுள்ள வாகனங்களுக்காக பதிவுசெய்கின்ற சந்தர்ப்பத்தின் போதும் அது தொடர்பாக சிறு குறிப்பொன்று வாகனங்களை அடையாளம் காணும் போது சான்றுப்பத்திரத்தில் அச்சிடப்படல் சுயமாக மேற்கொள்ளப்படும் வகையில் கணனி முறைமை தொடர்புபடுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த வரித்தொகை அறவிடல் கைவிடப்பட 16 சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(ஆ) வாகனங்களைப் புதிதாகப் பதிவுசெய்தல்

---------------------------------------------------------------------

வாகனங்களைப் புதிதாகப் பதிவுசெய்தல் தொடர்பாக திணைக்களத்தில் ஏற்படுகின்ற மோசடியான நடவடிக்கைகள் தொடர்பாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு தொடர்ச்சியாக கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த மோசடியான நடவடிக்கைகள் தொடர்பாக துரிதமாக பரிசோதனை மேற்கொண்டு, அந்த மோசடியான நடவடிக்கைகளுக்காக முன்னின்று செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அந்த வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்தல் என்பன உள்ளடங்கலாக வாகன உரிமையாளர்கள் தொடர்பாக மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(இ) மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றாமை

-----------------------------------------------------------------------------------------------------------------------

1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குரவத்து அதிகாரச்சட்டத்தின் 18 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின்படி பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) விபத்திற்குள்ளாகிய அல்லது வேறு வகையில் முழுமையாக அகற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வாகனத்தின் பதிவினை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இரத்துச் செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குரிய வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாத வாகனங்கள் தொடர்பாக மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) சுனாமி, பயங்கரவாத முயற்சிகளை உள்ளடக்கிய இயற்கையான மற்றும் செயற்கையான விடயங்களின் காரணமாக அனேகமான வாகனங்கள் அழிவடைந்த போதிலும் அந்த வாகனங்கள் தொடர்பாக திணைக்களத்தின் செயற்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(v) நாட்டினுள் உள்ளபடியாக ஓடுகின்ற வாகனங்கள் தொடர்பான புள்ளிவிபரத் தகவல்களை இனங்காணக்கூடிய வகையில் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வாகனக் கோவைகளைப் பாதுகாக்காமை

---------------------------------------------------------------------

திணைக்களத்தில் நாளாந்தம் பதிவுசெய்யப்படுகின்ற வாகனங்களின் மூலக்கோவைகளைப் பாதுகாத்தல் திணைக்களத்தால் நிறைவேற்றவேண்டிய அத்தியவசிய செயற்பொறுப்பான போதிலும் வாகனங்களின் மூலக்கோவைகள் பாரியளவில் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படாமையாலும் காணாமல் போயிருந்தமையினாலும் அதன் அத்தியவசிய செயற்பொறுப்புக்கள் திணைக்களத்தால் போதியளவான பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) வாகன உரிமையாளரால் வாகனங்களைப் பதிவு செய்யும் விண்ணப்பப்படிவத்தில் பிழையான தகவல்களை வழங்குதல்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் 18(2) (இ) உப பிரிவின் படி உரிமையாளருக்கு விருப்பமான தெரிவினைச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதன் பின்னர் (பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட அவர்களின் முகவரிக்கு பதிவுத்தபாலில் அறிவித்தலொன்றை அனுப்பியதன் பின்னர் அறிக்கையிடப்பட வேண்டிய காரணத்தின் படி) மோட்டார் வாகனமொன்றின் பதிவு இரத்துச் செய்ய முடியுமாக இருந்த போதிலும், 82 வாகனங்களைப் பதிவு செய்வதற்காக வாகன உரிமையாளரால் பதிவுசெய்யும் விண்ணப்பப் படிவத்தில் பிழையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்களின் பதிவு தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்தல்

--------------------------------------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தால் நீண்டகாலமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ஓட்டத்திலிருந்த அகற்றப்பட்ட வாகனங்களின் இலக்கத்தைப் பயன்படுத்தி சுங்க வரி செலுத்தாது சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட வாகனங்களின் தரவுகள் அந்த வாகனங்களுக்குரிய பதிவிற்கு உள்ளாக்கப்பட்டு அல்லது அந்த வாகனங்களை அடையாளம் காணும் இலக்கத்தை ஈடுபடுத்தி பல முறைகேடுகளைச் செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. இந்த முறைகேடுகள் காரணமாக மோசடியான வாகனப் பதிவுகள் மேலும் அதிகரிப்பதற்கும் வாகன வரி வருமானம் போதியளவில் குறைவடைவதற்கும் அவை காரணங்களாக இருந்தன.

(எ) மோசடியாக மாற்றப்பட்ட வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்

--------------------------------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 12/1490/538/036 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பு மற்றும் 2013 சனவரி 03 ஆந் திகதிய அந்த அமைச்சரவைக் குறிப்பில் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி 2013 மார்ச் 31 ஆந் திகதியின் பின்னர் மாற்றப்படுகின்ற வாகனங்கள் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு இடமளிக்கப்படாதிருந்ததுடன், அதன் பின்னர் பதிவு செய்யாது மாற்றப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்துகின்ற நபர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. சட்டத்திற்கு முரணாக மாற்றப்படுகின்ற மோட்டார் வாகனங்கள் இலகுவாக பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அந்த நபர்கள் தொடர்பாக அமைச்சரவைத் தீர்மானத்தின் படி சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வீதியில் ஓடுகின்ற வாகனங்களின் பரிசோதனையின் போது மாற்றப்பட்ட 24 வாகனங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அதற்கு மேலதிகமாக மேலும் பாரியளவில் அவதானிக்க கூடியதாக இருந்த போதிலும், மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் படி அவ்வாறான வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்தல், வருடாந்த வாகன வருமான அனுமதிப்பத்திரத்தை

விநியோகிக்காமைக்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வாறான வாகனங்கள் தொடர்பான விபரங்களை இலங்கை பொலிஸ் மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் என்பவற்றை உள்ளடக்கிய மிகவும் இலகுவாக நிறைவேற்றக்கூடிய செயற்பொறுப்புக்கள் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வாகனங்களின் நிறை தொடர்பான பரிசோதனை

-----------------------------------------------------------------------------------

1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் 7(2) உப பிரிவின் படி மோட்டார் சைக்கிள் தவிர, மோட்டார் வாகனமொன்றைப் பதிவு செய்வதற்காக ஒவ்வொரு விண்ணப்பதாரியும், ஆணையாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்பட்டாலொழிய, ஆணையாளர் நாயகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மோட்டார் வாகனத்தின் நிறை தொடர்பாக உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் தெரிவுப் பரிசோதனையின் போது 540 வாகனங்களின் நிறை தொடர்பாக பௌதீக பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்ளப்படாமல் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

## 3.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சுங்கக் குறிப்புக்களின்றி எந்த வாகனமும் திணைக்களத்தில் பதிவு செய்ய முடியாதிருந்த போதிலும், 2009 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 82 வாகனங்கள் சுங்கக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்ட அத்திகதிக்கு முன்னைய ஆண்டுகளின் போது, அதாவது 10 வருடங்கள் முதல் 29 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு முன் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்பாடுகள் பாரியளவில் மோசடித் தன்மையுடையதாக காணப்பட்ட போதும் திணைக்களம் இது தொடர்பான எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

(ஆ) மோசடியாக மாற்றப்பட்ட வாகனங்கள் 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்பிருந்து சட்டரீதியான நிலைமைக்கு உட்படுத்துவதற்காக 2013 சனவரி 03 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தக்

காலத்தில் அமைச்சரவைக் குறிப்பில் காண்பிக்கப்பட்ட தொகுதியின் கீழ் எந்த வாகனமும் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) " P" மற்றும் "L" வாகனங்களை இனங்காணும் ஆங்கில எழுத்துத் தொகுதியின் கீழ் முறையே இரு நோக்க செயற்பாட்டு வாகனங்கள் மற்றும் மோட்டார் லொறி வண்டிகள் மாத்திரம் பதிவு செய்யப்படுகின்ற போதிலும், அதனை இனங்காணும் ஆங்கில எழுத்தின் கீழ் ஐந்து கதவுகளையுடைய சொகுசு ஸ்டேசன் வெகன் வண்டிகளும் பதிவுசெய்யப்பட்ட 24 சந்தர்ப்பங்கள் பௌதீக வீதிப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன. மேற்கூறப்பட்ட இருபத்திநான்கு வாகனங்களும், கப் வாகனம் மற்றும் டிபண்டர் வாகனங்களாக இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர் ஐந்து கதவுகளுள்ள சொகுசு ஸ்டேசன் வெகன் வாகனமாக மாற்றப்பட்டிருந்தன.

(ஈ) விஷேட பணிக்கான வாகனம், இரு நோக்க செயற்பாட்டு வாகனமாகவும் மோட்டார் லொறியாகவும் பதிவு செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 சனவரி 01 ஆந் திகதி முதல் 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை சுங்கக் குறியீடு இலக்கம் 8705 இன் கீழ் விஷேட பணிக்காக இறக்குமதி செய்யப்பட்ட 540 வாகனங்களில் 93 வாகனங்கள் இரு நோக்க செயற்பாட்டு வாகனங்களாகவும், 358 வாகனங்கள் மோட்டார் லொறியாகவும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன. விஷேட நோக்கத்திற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்கள் "ZA" ஆம் இலக்கத் தொகுதியின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் இரு நோக்க செயற்பாட்டு வாகனம் மற்றும் லொறிக்காக வழங்கப்படுகின்ற "P" மற்றும் "L" என்ற வாகனங்களை இனங்காணும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதன் படி, மேற்கூறப்பட்ட 451 வாகனங்களிலிருந்து ரூபா 6,551,000 தொகையான வருமானம் அரசிற்கு இழக்கப்பட்டிருந்தது.

(ii) கொங்கிரீட் கலவை இயந்திர லொறிகள் (Concrete Mixer Lorries) மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 240 ஆம் பிரிவின் பிரகாரம், விஷேட பணிக்கான வாகனம் என்ற வகைப்படுத்தலுக்குரியதாகும். எனினும் அதிகாரச்சட்டத்தின் 122(2)(1) என்ற உப பிரிவில் காண்பிக்கப்பட்ட பட்டோலை இல. 10 இன் விடயத்தின் கீழ் ஏற்றுதல்,

இறக்குதல் மற்றும் நிர்மாணிக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட மோட்டார் லொறி மற்றும் கனரக மோட்டார் லொறி என்பன விஷேட பணிக்கான வாகன வகுப்பிற்குரித்தற்றதாகக் காண்பிக்கப்பட்டமை சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(உ) புதிய பதிவாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வாகனங்களின் தகவல்களுடன் சுங்க கணனி முறைமையில் குறிப்பிட்ட தகவல்கள் இணங்காதிருக்குமாயின் அப்பதிவுகள் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகளைச் செய்வதற்கு கணனி முறைமை இடமளிக்காது. சுங்க திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட சுங்கக் குறிப்புக்களின் பிரகாரம் மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமை குறிப்பிடப்பட்டு சுங்கக் குறிப்புக்களின் கீழ் திணைக்களத்தின் கணனி முறைமையில் 10 மோட்டார் கார்களும் ஏனைய 16 வாகனங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

## 3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

அதிகார பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாக சொகுசு வரி அறவிடவேண்டிய வாகன வகைப்படுத்தல் பிழையாக பயன்படுத்தப்பட்டமையின் காரணமாக சொகுசு வரி அறவிடவேண்டிய வாகனங்களிலிருந்து அரை சொகுசு வரி அறவிடப்பட்டிருந்தது.

1995 இன் 16 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் படி, கனரக வாகனங்கள் தவிர சிலிண்டர் கொள்வனவு 2,500 இனை விஞ்சுகின்ற ஏதாவது டீசல் வாகனம் அல்லது சிலிண்டர் கொள்வனவு 2000 இணை விஞ்சுகின்ற பெற்றோல் மோட்டார் வாகனம் என்பனவே சொகுசு வாகனங்களாக கருதப்படுகின்றது. இந்த ஏற்பாடுகளின் பிரகாரம், 1995 செப்தெம்பர் 07 ஆந் திகதிய 881/14 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கனரக வாகனங்களுக்குரிய வாகன வடிவம் மற்றும் சிலிண்டர் கொள்ளளவு காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த வடிவத்திற்கு மாற்றமான வகையின் ஜீப் வண்டியும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுகின்றது. அதன்படி, தற்போது திணைக்களத்தால் மேற்கூறப்பட்ட

வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளுக்குப் புறம்பாக உள்ளகச் சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு சிலிண்டர் கொள்வனவு 2,500 இனை விஞ்சுகின்ற டீசல் ஜீப் வண்டிக்காகவும் சிலிண்டர் கொள்வனவு 2,000 இனை விஞ்சுகின்ற பெற்றோல் ஜீப் வண்டிக்காகவும் விதிக்கப்படுகின்ற வரி சொகுசு இல்லாவிடின் அரை சொகுசாக தீர்மானிக்கப்பட்டு வரி அறவிடப்பட்டிருந்தது. அரசியலமைப்பின் 148 ஆவது உறுப்புரையின் படி அரசாங்க நிதி தொடர்பான பூரண கட்டுப்பாடு பாராளுமன்றத்குரித்தானமையால் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட ஏற்பாடுகளின் படி திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சொகுசு வரி அறவிடல் மற்றும் அரை சொகுசு வரி அறவிடல் என்பவற்றைத் தீர்மானிக்கும் அடிப்படை சர்ச்சைக்குரியதாக இருந்தது.

## 3.10 மோசடியான வடிவிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடியான வடிவிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) காளெட் அனுமதிப்பத்திரத்தின் (Carnet permits) அடிப்படையில் கொண்டுவரப்பட்ட 08 வாகனங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டமை.

ஒரு நாட்டிலிருந்து இன்னுமொரு நாட்டிற்கு சுற்றுலா செல்கின்ற பிரமுகர்களுக்காக அந்த நாட்டில் சுற்றுலா செல்கின்ற கால எல்லையில் அந்த பிரமுகர்களின் வாகனங்களைப் பயன்படுத்துவதற்காக காளெட் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுகின்றது. 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் அந்த வாகனத்திற்காக 12 மாதகாலத்திற்காக தற்காலிக அனுமதிப்பத்திரம் விநியோகிக்க முடியும். இருந்த போதிலும் அந்த காளெட் அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட 08 வாகனங்கள் திணைக்களத்தில் நிரந்தரமாகப் பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அவ்வாறே மேற்கூறப்பட்ட 08 வாகனங்களில் சில வாகனங்கள் காளெட் அனுமதிப்பத்திரத்தின் மூலும் தற்காலிக பதிவிற்காக அங்கீகாரம் வழங்கிய திகதிக்கு முன்னுள்ள திகதிகளில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி இந்த வாகனங்கள் மோசடியானதாக திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தமையை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதிருந்தது.

(ஆ) உற்பத்தி வருடத்தை பிழையாக மாற்றுதல்

---

2011 சனவரி 01 ஆந் திகதி முதல் 2011 யூலை 11 ஆந் திகதி வரை KDH200 மற்றும் LH செசி தொகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்ட இரட்டை நோக்க செயற்பாட்டு வாகனங்களுக்குரிய ஒரு வாகனத்தின் உள்ளபடியான உற்பத்தி வருடத்தின் இணைய தளத்தில் (www.japanpartner.com/checkmanufacture-year.php) குறிப்பிடப்பட்ட உற்பத்தி ஆண்டுடன் இணக்கஞ் செய்த போது திணைக்களத்தில் பதிவு செய்த 43 வாகனங்களுக்குரிய அந்த உள்ளபடியான உற்பத்தி வருடத்தை மாற்றி அதன் பின்னரான வருடம் உள்ளடக்கப்பட்டு திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(இ) இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய பொருட்களுக்குரிய சுங்கக் குறிப்புக்கள் பயன்படுத்தப்பட்டு மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல்

---

மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட சுங்கக் குறிப்புக்கள் பயன்படுத்தப்பட்டு 26 மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதன்படி இந்த 26 வாகனங்களுக்கு சட்டரீதியற்ற வகையில் சுங்கவரி செலுத்தாது அல்லது சட்டரீதியற்ற வகையில் தயாரிக்கப்பட்ட வாகனமாக இருந்தமையும் அந்த வாகனங்கள் மோசடியாக திணைக்களத்தில் பதிவுசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) வாகன உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட சுங்கக் குறிப்புக்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட வாகனங்களைப் பதிவு செய்தல்

---

2009 திசெம்பர் 29 ஆந் திகதிய CBMV 1 – 5636 ஆம் இலக்க சுங்க குறிப்பு மற்றும் சுங்கக் குறியீடு இலக்கம் (H.S.இலக்கம்) 8706 இன் மூலம் வாகன உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த உதிரிப்பாகங்களை பயன்படுத்தி சட்டரீதியற்ற வகையில் தயாரிக்கப்பட்டதாக அவதானிக்கப்பட்ட 23 வாகனங்கள் திணைக்களத்தில் இரட்டை நோக்க வாகனங்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தன. இவ்வாறு மோசடியாக பதிவு செய்தமையின் காரணமாக பாரியளவிலான வரி வருமானத்தை அரசாங்கம் இழந்திருந்தது.

(உ) குறைந்த சுங்கவரி செலுத்த வேண்டிய சுங்கக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு இந்நாட்டில் அந்த வாகனங்கள் மோட்டார் கார், ஜீப்வண்டி, வான் மற்றும் டபள் கெப் ஆகத் தயாரிக்கப்பட்டு திணைக்களத்தில் பதிவுசெய்தல்

---

2009 பெப்ரவரி 03 ஆந் திகதிய CBMV 1 - 570 ஆம் இலக்க மற்றும் 2009 சனவரி 12 ஆந் திகதிய CBMV 1 - -207 ஆம் இலக்க இறக்குமதி சுங்கக் குறிப்புக்களின் மூலம் 08 லேண்ட்ரோவர் கப் வாகனங்களை உள்ளடக்கி வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அந்த 08 வாகனங்களில் 02 வாகனங்கள் மோட்டார் காரின் கீழ் 02 சொகுசு ஜீப் வண்டிகளாக திணைக்களத்தில் மோசடியாக பதிவு செய்யப்பட்டிருந்தது. இதன் படி குறைந்த சுங்கவரி செலுத்த வேண்டிய சுங்கக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு இந்நாட்டில் அந்த வாகனங்கள் மோட்டார் கார், ஜீப்வண்டி, வான் மற்றும் டபள் கெப்பாகத் தயாரிக்கப்பட்டு திணைக்களத்தில் பதிவுசெய்ததன் மூலம் பாரியளவில் மோசடிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக பாரியளவிலான வரி வருமானத்தையும் அரசாங்கம் இழந்திருந்தது.

(ஊ) ஆங்கில எழுத்து தொகுதியின் கீழ் பதிவு செய்யவேண்டிய வாகனங்கள் தவிர ஏனைய வாகனங்களைப் பதிவுசெய்தல்

---

“PP” முதல் “PX” வரை வாகனங்களை இனங்காணும் ஆங்கிய எழுத்துத் தொகுதியின் கீழ் சிங்கிள் கப் வாகனம் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த இலக்கத் தொகுதியின் கீழ் டபள் கெப் வண்டிகளும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(எ) கெப் வாகனமாக சுங்கவரி செலுத்தி இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் மோட்டார் காராக பதிவு செய்தல்

---

சுங்கத் திணைக்களத்தின் தகவல்களின் படி 03 வாகனங்கள் கெப் வாகனமாக சுங்கவரி செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த 03 வாகனங்களும் திணைக்களத்தில் மோட்டார் காராக மோசடியான முறையில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஏ) நோயாளர் காவும் வண்டி மற்றும் சவ ஊர்திகளை இறக்குமதி செய்தலும் பதிவு செய்தலும்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

நோயாளர் காவும் வண்டி மற்றும் சவ ஊர்திகளாக இறக்குமதி செய்யப்பட்டு மோசடியாக ஏனைய வகைகளுக்குரிய வாகனங்களாக அல்லது நபர்களின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) சுங்கக் குறியீட்டு இலக்கம் 8403 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு திணைக்களத்தால் நோயாளர் காவும் வண்டியாக பதிவுசெய்யப்பட் வாகனத்தின் பௌதீக பரிசோதனையின் போது சொகுசு ஜீப் வண்டியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த வாகனம் குறைந்த சுங்கவரி செலுத்த வேண்டிய சுங்கக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் நோயாளர் காவும் வண்டியாக இறக்குமதி செய்து சொகுசு ஜீப் வண்டியாக மாற்றப்பட்டிருந்தது.

(ii) நோயாளர் காவும் வண்டியாக இறக்குமதி செய்து பதிவுசெய்யப்பட்ட இரண்டு வாகனங்கள் இரட்டை நோக்க செயற்பாட்டு வாகனமாக மாற்றப்பட்டிருந்தது.

(iii) அரசாங்க வைத்தியசாலை அல்லது தனியார் வைத்தியசாலைகளை உள்ளடக்கிய சுகாதார நிலையம் அல்லது நோயாளர் காவும் வண்டியின் தேவை காணப்படுகின்ற ஏனைய விஷேடமான நிறுவனங்களாக பேணுகின்ற அரசாங்கத்தின் அல்லது தனியார் நிறுவனத்தின் பெயரில் நோயாளர் காவும் வண்டி பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் 15 வாகனங்கள் தனியார் பெயர்களில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) நோயாளர் காவும் வண்டி மற்றும் சவ ஊர்தி என்பவற்றை இறக்குமதி செய்த நிறுவனத்தால் ஏனைய நபர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட 15 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(v) 2011 நவம்பர் 17 ஆந் திகதிய CBMV 1 - 48296 ஆம் இலக்க சுங்கக் குறிப்புக்கள் மற்றும் 8703-22-30 ஆம் இலக்க சுங்கக் குறியீட்டின் மூலம் சவ ஊர்தி இறக்குமதி செய்யப்பட்ட போதிலும், அந்த சவ ஊர்தி,

மோட்டார் காராக 2012 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்தது.

## 3.11 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கியிருந்த கணக்காய்வுப் பந்திகளின் பின் தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பந்திகளுக்குரிய தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2012 | 12(இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க), (கா), (கி), (கீ), (கு), (கூ), (செ), (சே), (சை), (சொ), (சோ), (சௌ), (ட) (டா), (டி), (டீ), (டு) | மோசடியான வடிவிலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் |
| 2012 | 8-இ-(i), (ii), (iii) | செயலாற்றல் |
| 2012 | 10(அ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ) | சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் |
| 2012 | 11-(இ), (ஈ) | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் |

## 3.12 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உத்தியோகத்தரால் ஒவ்வொரு மாதத்திலும் சம்பளம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கு சம்பளப் பதிவேட்டில் அல்லது சம்பளப் படிவங்களில் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், சம்பளப் பதிவேட்டில் கையொப்பமிடாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. மேலும் கம்பஹா, களுத்துறை, நுவரெலியா மற்றும் திருகோணமலை போன்ற மாவட்டங்களில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களால் சம்பள படிவங்களில் கையொப்பமிட்டு தலைமை அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளி மாகாண அலுவலகங்களில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் விடுமுறை தொடர்பான மாதாந்த அறிக்கை தலைமை அலுவலகத்திறகு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அந்த உத்தியோகத்தர்களின் வருகை, விடுமுறை பெற்றுக்கொள்ளல்களை உள்ளடக்கிய நடவடிக்கைகள் தொடர்பான மேற்பார்வை நலிவான நிலையில் காணப்பட்டது.

(இ) பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஏற்படுகின்ற தவறு மற்றும் மோசடிகளை மிகவும் குறைப்பதற்காக வாகனக் கோவைகளை முறையாகப் பேண வேண்டிய போதிலும் வாகனக் கோவைகள் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தில் வாகனங்களைப் பதிவு செய்தல், கையளித்தல்களை உள்ளடக்கிய பணிகளை நிறைவேற்றுவதற்காக கணனி முறைமை பயன்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக அதன் உள்ளகக் கட்டுப்பாட்டில் பின்வரும் குறைபாடுள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) வாகனங்களைப் பதிவு செய்வதற்காக முக்கியமான சகல தகவல்களும் இணையத்தளம் மூலம் நேரடியாக மற்றும் மாற்றமுடியாததாக சுங்க கணனி முறைமை வலைப்பின்னலின் ஊடாக திணைக்களத்திற்கு பெறக்கூடிய வகையில் கணனி முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பதிவினை மேற்கொண்ட வாகனங்களின் ஏதாவது தகவல்களை மாற்றுகின்ற போது அது முறையாகவும் வெளிப்படையாகவும் நிறைவேற்ற வேண்டிய முறையில் கணனி முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்படாமல் மோட்டார் வாகனங்களை தயாரித்தல், உற்பத்தி செய்தல், ஒன்றுசேர்த்தல், புதிதாக வடிவமைத்தல், பாகங்களாகப் பிரித்தல், மெருகூட்டுதல் அல்லது வடிவமைப்பை மாற்றுதல் செயற்பாடுகளை உள்ளடக்கிய மோட்டார் வாகனங்கள் தொடர்பாக ஏற்படுகின்ற பல்வேறு பிழையான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபர்களை வெளிக்கொணர்ந்து அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக திணைக்களத்தில் வெகுமதி மற்றும் ஊக்குவிப்புப்படி நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது. இந்த நிதியத்திற்காக மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டண வருமானத்தில் 1 சதவீத அளவு ஒவ்வொரு வருடமும் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் வெகுமதி நிதியத்தின் மூலமான கணக்காய்வு அவதானிப்புக்களிலிருந்து காண்பிக்கப்பட்ட முறையற்றவகையில் மாற்றப்பட்ட வாகனங்களை இனங்காண்பதற்கு, அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள முடியுமான போதிலும், அவ்வாறான எவ்வித நடவடிக்கைகளும் இந்த வெகுமதி நிதியத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வெகுமதி முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் வாகனங்கள் தொடர்பாக இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து நேரடியாகப் பெறப்படுகின்ற நம்பிக்கை உறுதிப்படுத்தல்கள் ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை அபிவிருத்தி செய்யும் தேவைப்பாடு 04 கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரால் நிபந்தனை அகற்றப்பட்டமைக்கு அந்த திணைக்களத்தின் கடிதத் தலைப்பு மற்றும் திணைக்களத்தின் பெக்ஸ் செய்திகளை இலகுவாகப் பயன்படுத்தி 32 வாகனங்களின் உரித்தை வேறுதரப்பினருக்கு கையளிக்க முடியாது என உள்ளடக்கப்பட்ட நிபந்தனையை, வாகனங்களை பதிவு செய்யும் போது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(எ) காப்புறுதி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் படி, விபத்திற்குள்ளாகி ஓட்டத்திலிருந்து அகற்றபட்ட 06 வாகனங்களுக்கு அதிகாரச்சட்டத்தின் 18 ஆவது பிரிவின் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுத்து அந்த வாகனங்களின் பதிவுகளை கைதவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்தக் காரணத்தின் அடிப்படையில் இந்த வாகனங்கள் மேலும் ஓடுகின்ற வாகனமாக திணைக்களத்தின் தகவல்களின்படி காண்பிக்கப்படுகின்றது. திணைக்களத்தால் காலாவதியாகி ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் இலக்கத்தைப் பயன்படுத்தி சுங்கவரி செலுத்தாது சட்டரீதியற்ற வகையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட வாகனங்களின் தரவுகள் இந்த வாகனங்களுக்கு உள்ளீர்க்கப்பட்டு அல்லது இந்த வாகனங்களை இனங்காணும் இலக்கத்தை ஈடுபடுத்தி கணிசமான மோசடிகள் மேற்கொள்ளப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஏ) நோயாளர் காவும் வண்டி மற்றும் சவ ஊர்தி போன்ற விஷேடமான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களைப் பதிவு செய்யும் போது அந்த விஷேடமான நோக்கத்திற்குப் புறம்பாக செல்வதைத் தடுப்படுதற்காக போதியளவான செயற்பாடுகள் திணைக்களத்தில் காணப்படாததுடன் அதன்படி அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்களுக்கு அல்லது நபர்களுக்கு விஷேடமான அனுமதிப்பத்திரத்தின் மூலம் மாத்திரம் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இடமளிப்பதன் ஊடாக இந்த மோசடிகளைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) விஷேட பணிக்கான வாகனமாக சுங்கக் குறியீடு இலக்கம் 8705 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு திணைக்களத்தில் மோட்டார் லொறியாகப் பதிவுசெய்யப்பட்ட 09 கொங்கிரீட் கலவை லொறி (Concrete – mixer lorries) டிபர் வாகனமாக மாற்றப்பட்டிருந்தது. அதன்படி இந்த ஒன்பது வாகனமும் விஷேடமான பணி நோக்கத்திற்கு புறம்பாக பயன்படுத்தப்படுவதுடன் இவ்வாறு விஷேட பணிக்கான வாகனமாக இறக்குமதி செய்யப்பட்ட பாரியளவான வாகனங்கள் டிபர் வாகனங்களாகவோ அல்லது இரட்டை நோக்க வாகனங்களாகவோ அதன் நோக்கங்களுக்கு மாற்றமாக பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 22 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 19 | 15 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 792 | 771 | 21 |
| (iv) | ஆரம்ப நிலை | 121 | 113 | 08 |
| (v) | ஏனையோர்(ஒப்பந்த அடிப்படை) | 06 | 06 | - |
| | மொத்தம் | 960 | 927 | 33 |

மீளாய்வாண்டின் இறுதியளவிலும் 33 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.